# சுதந்திர மணி வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

ஆக்கியோர் :
வித்துவான் க. முருகேசன்,
தலைமைத் தமிழாசிரியர்,
அர்ச். மரியன்னை உயர்நிலைப்பள்ளி, திண்டுக்கல்

பழனி & கோ பதிப்பகம்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை

முதற் பதிப்பு—நவம்பர் 1951

Kabeer Printing Works, Madras (1783)

# முகவுரை

'சுதந்திர மணி வாசகம்' என்னும் பெயர் புனைந்து வெளிவரும் இப்புத்தகங்கள் வகுப்பு அநுபவமும், புலமையும் உடைய ஆசிரியரால் தொகுக்கப் பெற்றவை. பொருள்கள் கால நிலையைத் தழுவியும், வகுப்பிற் கேற்ற வாறும், சுருங்கச் சொல்லல், நன்மொழி புணர்த்தல், நயம்பட வுரைத்தல் என்ற அமைப்புக்களைத் தழுவியும் சேர்க்கப் பெற்றுள. முரண்பாடான கொள்கைகளும், காலத்திற்குப் பொருந்தாதனவும், வாழ்க்கையில் பயன் படாதனவும் இப்புத்தகங்களில் இடம் பெறவில்லை. வாசகங்கள் முன் வகுப்போடு தொடர்ச்சியுள்ள முறையில் (Concentric System) படிப்படியாக வாசிக்கும் பயிற்சியைக் கொடுப்பனவாகவும், மொழிப் பயிற்சியில் தேர்ச்சியை யளிப்பனவாகவும், கருத்துக்களை வெளியிடு வனவாகவும் யாக்கப்பட்டுள. இப்புத்தகங்கள் யாவராலும் ஏற்கப் பெற்று சிறுவர் சிறுமியர் பயன்பெற வேண்டு மென்பதே எங்கள் அவா.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்மொழி வாழ்த்து | ... | 1 |
| 2. | நமது தேசம் | ... | 2 |
| 3. | பாரதநாடு (பாட்டு) | ... | 5 |
| 4. | வழிப்போக்கனும் ஆலம்பழமும் | ... | 6 |
| 5. | சூரியனும் சந்திரனும் | ... | 9 |
| 6. | வக்கம் வீரர் சிதம்பரனுர் | ... | 12 |
| 7. | செந்தமிழ்நாடு (பாட்டு) | ... | 16 |
| 8. | புத்தகமும் ஏடும் | ... | 17 |
| 9. | பழய குருடி | ... | 20 |
| 10. | தேனீ வளர்த்தல் | ... | 24 |
| 11. | கூட்டுறவுப் பண்டகசாலே | ... | 28 |
| 12. | நுண்ணிய கருமமும் எண்ணித்துணி | ... | 32 |
| 13. | பிறப்புக்கள் | ... | 35 |
| 14. | சதகங்கள் | ... | 40 |
| 15. | சிலப்பதிகாரம் | ... | 42 |
| 16. | பட்டு | ... | 45 |
| 17. | அன்னே அடைந்த வீர இன்பம் | ... | 47 |
| 18. | பாடம் ஏறுவது எப்படி ? | ... | 50 |
| 19. | மாணுக்கர் | ... | 54 |
| 20. | பஞ்ச தந்திரம் (பாட்டு) | ... | 58 |
| 21. | கடிதங்கள் | ... | 59 |
| 22. | பத்திரிகையும் செய்தியும் | ... | 61 |
| 23. | இரட்டைப் புலவர்கள் | ... | 62 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 24. | மின்னலும் இடியும் | ... | 65 |
| 25. | விவேகசிந்தாமணி (பாட்டு) | ... | 69 |
| 26. | அறிவின் ஆராய்ச்சி | ... | 70 |
| 27. | சாரணர்கள் | ... | 75 |
| 28. | காவிரி ஆறு | ... | 78 |
| 29. | நேர்மையுள்ள அதிகாரி | ... | 82 |
| 30. | சர்க்கரை | ... | 87 |
| 31. | வாழ்வினும் மானமே பெரிது | ... | 91 |
| 32. | இலக்கணக் குறிப்பு | ... | 96 |
| 33. | மூதுரை | ... | 102 |
| 34. | நல்வழி | ... | 105 |

# சுதந்திர மணி வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

### 1. தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையக மே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

—மகாகவி பாரதியார்

# 2. நமது தேசம்

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இந்தியா மிகப் பரந்த தேசம். ஆகையால் இதனைக் கண்டம் என்றும் கூறலாம். வெகு காலத்திற்கு முன்னே பரதன் என்ற ஓர் அரசன் இந்தியா முழுமையும் ஆண்டு வந்தான். அவன் மிகவும் புகழ் பெற்று விளங்கினான். ஆகையால் பரத கண்டம் என்ற பெயர் இந்தியாவிற்கு வழங்கலாயிற்று. நாட்டைப் பெண்பால் தெய்வமாக வணங்குவது நம் முன்னோரின் வழக்கம். ஆகையால் இந்தியாவை இந்தியத் தாய், அல்லது பாரதமாதா என்று நாம் போற்றுகிறோம். நாமெல்லோரும் இந்தியத்தாய் அதாவது பாரத மாதாவின் மக்கள். நமக்கு இந்தியர் அல்லது பாரத மக்கள் என்று பெயர்.

வடக்கில் இமயமலைத் தொடரும், மற்ற மூன்று பக்கங்களிலும் கடலும் இந்தியாவின் எல்லைகளாக விளங்குகின்றன. இமயமலையின் நடுவே உள்ள சிகரங்கள் இந்தியத் தாய்க்குச் சிரம் போலவும், அம்மலைத் தொடர்கள் ஒருமாலை போலவும், குமரி முனையே பாதங்கள் போலவும், மூன்று பக்கமும் உள்ள கடல்கள் ஆடைபோலவும் அழகாகத் தோற்றம் அளிக்கின்றன.

இந்தியாவின் நடுவில் விந்தியமலை கிழக்கு மேற்காகப் பரவி இருக்கின்றது. அம்மலை இந்தியாவின் நிலப்பகுதியை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றது. விந்தியமலைக்கு வடக்கிலுள்ள பாகம் வட இந்தியா அல்லது இந்துஸ்தானம் என்றும்,

தெற்கிலுள்ள பாகம் தென்னிந்தியா அல்லது திராவிட நாடு என்றும் வழங்கப்படும்.

பண்டைக் காலத்தில் இந்தியாவானது ஐம்பத்தாறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுகளை ஐம்பத்தாறு மன்னர்கள் தனித்தனியே ஆண்டு வந்தார்கள். இப்போது இந்தியா ஒரு பெரிய குடியரசு நாடாகியுள்ளது. வட இந்தியாவில் சில பகுதிகள் பாகிஸ்தானம் என்ற பெயருடன் தனி நாடாகியுள்ளன. வட இந்தியாவின் ஏனைய பகுதிகளும், தென்னிந்தியாவும் இந்தியக் குடியரசு என்ற பெயரால் ஆட்சி செய்யப்படுகின்றன. இரு அரசாங்கத்தாரும் சேர்ந்து இந்தியாவின் பொதுப் பெருமையைக் காத்துச் சிறப்பாக விளங்குகிறார்கள். இந்திய அரசாங்கத்தாருக்குத் தலைநகரம் டில்லி. அது புது டில்லி என்று வழங்கப்படும். பழைய டில்லி என்பது இந்தியாவின் பண்டைத் தலைநகர். இந்திய அரசாங்கம் பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; அவற்றுள் நாம் வசிப்பது சென்னை ராஜ்யம்.

இமயமலைகளில் கங்கை, சிந்து, பிரம்மபுத்திரா முதலிய பேராறுகள் தோன்றி, வடஇந்தியாவின் சமவெளிகளில் பாய்கின்றன. அவ்வாறுகளின் நீர்வளத்தால் வடஇந்தியா நல்ல செழிப்பை அடைகின்றது.

மேற்குத் தொடர்ச்சிமலைகளும், கிழக்குத் தொடர்ச்சிமலைகளும் தென்னிந்தியாவிலுள்ள பெரிய மலைகள். கோதாவரி, கிருஷ்ணை, நர்மதை, தப்தி, காவிரி, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு,

வைகை, தாமிரவர்ணி என்பன தென்னிந்தியாவில் உள்ள முக்கிய நதிகள். இவற்றால் தென்னிந்தியா நல்ல செழிப்பை அடைகின்றது.

தெலுங்கு நாடு அல்லது ஆந்திரநாடு, கன்னட நாடு, மலையாள நாடு, தமிழ்நாடு என்பன திராவிட நாட்டின் பகுதிகள். தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் என்பன திராவிடமொழிகள் எனப்படும். இம் மொழிகளைத் தாய்மொழியாக உடையவர்கள் திரா விடர்கள் ஆவர்.

இந்தியா பழம்பெருமை வாய்ந்தது; கல்விமான் களும் வீரர்களும் உடையது; மிகப் பழங்காலத்தி லிருந்தே நாகரிகத்திற் சிறந்தது. இந்நாட்டில் விவ சாயம் மிக்கு நடைபெறுகின்றது. தொழில்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் நமது தேசத்தில் அமைந் திருக்கின்றன. வர்த்தகத்திலும் நமது தேசம் ஆதி காலத்திலிருந்தே நல்ல பழக்கம் உடையது.

இந்தியர்களாகிய நாம் எல்லோரும் ஓர் இனம். நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும்; இந்தியாவின் பெருமையை விளங்கச் செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெண்பால் தெய்வம் | எல்லை | இந்துஸ்தானம் |
| இந்தியத்தாய் | சிகரம் | திராவிடம் |
| பாரதமாதா | சிரம் | பண்டைக் காலம் |
| குடியரசு | ஏனைய | தனித்தனியே |
| பொதுப் பெருமை | ராஜ்யம் | தலைநகரம் |
| சமவெளி | பகுதி | கல்விமான் |
| பழங்காலம் | வசதி | ஆதிகாலம் |

### கேள்விகள்

1. பரதகண்டம் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது?
2. இந்துஸ்தானம் என்ற பகுதி எது? திராவிடநாடு என்ற பகுதி எது?
3. இந்தியாவின் இயற்கை அமைப்பின் அழகை விவரி.
4. இந்தியாவிலுள்ள இரண்டு தனி அரசாங்கங்கள் யாவை?
5. நாம் எவ்வாறு வாழவேண்டும்?

## 3. பாரத நாடு

வெள்ளி மலையும் வடக்காக—விரி
வெற்புடைச் சிங்களம் தெற்காக
பள்ளக் கடலடி வங்காளம்—கீழ்ப்
பாரிசம் மேற்கில் அரபிக்கடல்.
பரந்து கிடக்கின்ற தேசமடி—எம்மைப்
பாலிக்கும் இந்திய தேவியடி;
சிறந்து விளங்கிய தேசமடி—அவள்
சீரும் சிறப்பையும் கேளுங்கடி.
எந்தக் குலத்திற் பிறந்தாலும்—அவர்
எந்த நிலையில் இருந்தாலும்,
இந்த நிலத்திற் பிறந்தவர் எல்லோரும்
இந்தியத் தேவியின் மக்களடி.

—வே. இராமலிங்கம் பிள்ளை



## 4. வழிப்போக்கனும் ஆலம்பழமும்

ஒரு நாள் ஒரு வழிப்போக்கன் ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குப் போய்க்கொண்டிருந்தான். போகும் வழியில் சாலேயின் இரு பக்கங்களிலும், நிழல் தரும் மரங்கள் பல நெடுக இருந்தன. நேரம் செல்லச் செல்ல வெய்யிலின் வெப்பம் அதிகமாகிக் கொண்டே வந்தது. சாலேயின் வழியே நடந்து கொண்டிருந்த அவ் வழிப்போக்கன் சிறிது நேரம் இளேப்பாற விரும்பினுன். அவன் ஓர் ஆலமரத்தின் அடியில் தங்கினுன்.

அம்மரத்தின்கீழ் பரந்து விளங்கிய நிழல் அவனுக்கு மிக்க இன்பத்தைக் கொடுத்தது. ஆங்கு அவன் தரையின்மேல் ஒரு துனியை விரித்துப் படுத்துக்கொண்டான். படுத்திருந்தபடியே அவன்

அண்ணுந்து பார்த்துக்கொண்டு பற்பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தான். அம் மரத்தின் கிளைகள் நாலா பக்கங்களிலும் படர்ந்திருந்தன; அக் கிளைகளிலிருந்து ஆங்காங்கு விழுதுகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவ் விழுதுகளில் பல பூமிக்குள் இறங்கி, வேரூன்றிப் பருத்து அடிமரம் போன்றே ஆயின. கிளைகளில் தழைத்திருந்த பெரிய இலைகள் கூரை வேய்ந்ததுபோல் அழகாகத் தோன்றின. இடையிடையே காணப்பட்ட செந் நிறமும், சிறிய் உருவமும் உடைய ஆலம் பழங்கள் கண்ணிற்கு இனிய காட்சி அளித்தன. நூற்றுக் கணக்கான காகங்களும் கிளிகளும் அப் பழங்களைத் தின்றுகொண்டு அம் மரத்தின் கிளைகளில் அமர்ந் திருந்தன.

அத் தோற்றத்தைக் கண்ட வழிப்போக்கன் இயற்கையின் சிறப்பையும், இயற்கையை ஆக்கிய கடவுளின் மகிமையையும் எண்ணி எண்ணி ஆனந் தித்தான். என்ருலும், "பூசனிக்கொடியில் மிகப் பெரிய காய்கள் உண்டாகின்றனவே! பெரிய வடிவினையுடைய ஆலமரத்தில் வேப்பங்கனியின் அளவை ஒத்தனவாகிய சிறிய பழங்களைப் படைத்தது கடவுளுக்கு அறிவுடைமையாகுமோ?" எனத் தன் மனத்திற்குள் எண்ணினுன். அவ்வாறு எண்ணிக் கொண்டே அவன், தான் படுத்தபடியே நித்திரை செய்துவிட்டான்.

அவன் நித்திரை செய்து கொண்டிருக்கையில், ஓர் ஆலம் பழம் அவனுடைய நெற்றியின்மேல் விழுந்தது. பழம் விழுந்த உணர்ச்சியால், அவன்

விழித்து எழுந்தான். "என்னே என்னுடைய சிற்றறிவு! கடவுளின் பேரறிவை உணராமல் அவரை இகழ்ந்தேனே! ஆலம் பழம் பெரியதாக இருந்திருந் தால் இப்போது என் கதி என்ன ஆகியிருக்கும்? நான் இறந்திருப்பேன் அல்லவோ? மரத்தின்கீழ் எவ்வளவு பேர் நிழலுக்காகத் தங்குகிறார்கள்? அவர் களுக்கு ஆபத்து நேராமல் இருக்கும்பொருட்டே ஆலம் பழங்கள் இவ்வாறு சிறியனவாகப் படைக்கப் பட்டன என்பதை இப்போதுதான் நான் உணர்ந் தேன். கடவுளின் மகிமையே மகிமை!" என்று அவரை வாயாரப் புகழ்ந்தான்.

| | | |
|---|---|---|
| வழிப்போக்கன் | சாலை | செல்லச் செல்ல |
| விரித்து | நெடுக | இளைப்பாற |
| இடையிடையே | அமர்ந்து | அண்ணாந்து |
| நித்திரை | அடிமரம் | வேரூன்றி |
| உணர்ச்சி | விழித்து | சிற்றறிவு |
| படைத்தல் | கதி | பேரறிவு |
| மகிமை | வாயார | ஆக்கிய |

## கேள்விகள்

1. ஆலமரத்தின் தோற்றத்தை விளக்கிக் கூறு.
2. கடவுளின் அறிவைப் பற்றி வழிப்போக்கன் முதலில் எவ்வாறு இகழ்ந்தான்?
3. கடவுளின் பேரறிவை அவன் எப்போது உணர்ந் தான்?
4. இக் கதையால் நீ உணர்வது என்ன?

# 5. சூரியனும் சந்திரனும்

வானுலகில் காணப்படும் பலவிதப் பொருள் களில் தலை சிறந்து விளங்குவது சூரியன். சூரியன் இல்லாவிட்டால் நிலைத் திணைப் பொருள்கள் வளர மாட்டா; நமக்கு மழை இல்லை; சுருங்கக் கூறின், நாம் உயிர் வாழ்தலும் மிகக் கஷ்டமாகத்தான் இருக்கும். சூரியனிலிருந்து வரும் கிரணங்களால் பல நோய்கள் தீர்க்கப்படுகின்றன. நாம் எண்ணெய் தேய்த்துக் கொண்டு சிறிது நேரம் வெயிலில் இருந் தால் வைட்டமின் 'டி' என்ற சத்துப் பொருள் நம் உடலுக்குள் உண்டாகிறது. சூரியனுக்கு ஞாயிறு என்ற பெயர் வழங்கப்படுகிறது. இதன் பயன் கருதி இதனைத் தெய்வமாக இந்துக்கள் வணங்குகிறார்கள்.

இது பூமியிலிருந்து 9 கோடி மைல் தூரத்தி லிருந்தாலும், இதன் காலைத் தோற்றம் மனத்திற்கு மகிழ்ச்சியை விளைவிக்கும். காலை நேரத்தில் ஆற்றில் வீசும் அலைகளின்மேல் சூரிய ஒளிபட்டு, அவ்வொளி பலவித வர்ணங்களோடு நம் கண்ணுக்குத் தோன்று வது மிக அழகாயிருக்கும்.

குறுக்களவில் சூரியன் பூமியைவிட 108 பங்கு பெரியது. இது ஒரு நெருப்பு உருண்டை. இதைத் தொலை நோக்காடியின் வழியாகப் பார்த்தால் மேற் புறம் கரடு முரடாகவும், கருமை நிறப்புள்ளியோடும் காணப்படும். இதன் ஓரங்களில் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும். இதன் மேற்புறம் ஏழாயிரம் டிகிரி வெப்ப நிலையில் உள்ளது. உட்புறம் இன்னும் அதிகமான வெப்பமுடையதாயிருக்கும்.

மக்களுக்கு மனமகிழ்ச்சியைத் தரக்கூடிய மற்றொரு இயற்கைப் பொருள் சந்திரன். நிறைமதி நாளன்று திறந்த வெளியையோ அல்லது கடலையோ அல்லது கோடைக்காலத்தில் ஆற்றுப்பெருக்கற்று அருவி சலசல என்று ஓடுவதையோ, வெள்ளிய மணலையோ பார்த்தால், நாம் ஒரு புது இன்பம் அடைவோம் என்பதில் ஐயமில்லை. நாம் கவலை நீங்கி உவகை பெறுவோம். சந்திரனுக்குத் திங்கள் என்ற மற்றொரு பெயர் உண்டு.

சந்திரனைக் கண்ணாடியென்றும், இதில் பூமியின் நிழல் தெரிகிறதென்றும், இதன் உட்புறத்தில் தோன்றுவது முயலின் உருவம் என்றும் பலவாறாக மக்கள் கதைகள் வழங்கி வந்தனர்.

தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக சந்திரனின் உண்மை அமைப்பு தெரிய வருகிறது. சந்திரனும் பூமியைப்போலவே ஒரு கோளம் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இவ்வுலகில் காணப் படும் மலைகள், பள்ளத்தாக்குகள் போல அக்கோளத் திலேயும் இருக்கின்றன என்றும், சூரியனுடைய ஒளி சந்திரன் மீது படாத இடங்கள் கருமை அடைந்திருக் கின்றன என்றும், ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆராய்ச்சிப்படம் ஒன்று நம் பூமிப் படத்தைப்போல விஞ்ஞானிகள் வரைந்து பார்த்ததில் அதில் உயரமான மலைகளும், பள்ளத்தாக்குகளும் காணப்பட்டனவாம்.

பருமனில் சந்திரன் பூமியைவிட 50 மடங்கு சிறியது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு இயற்கை ஒளி கிடையாது. சூரியனுடைய ஒளியைச் சந்திரன் முதலில் பெற்றுப் பிறகு நமக்கு அவ்

வொளியைக் கொடுக்கிறது. சந்திர மண்டலத்தின் குறுக்களவு 2157 மைல் ஆகும்.

இவைகளின் பெருமையை உணர்ந்து தான் இளங்கோவடிகள் "ஞாயிறு போற்றுதும்" "திங் களைப் போற்றுதும்" என்று தமது சிலப்பதிகாரத்தில் போற்றுவாராயினர்.

| | |
|---|---|
| தோன்றுவது | ஆற்றுப் பெருக்கு |
| விஞ்ஞான ஆராய்ச்சி | பள்ளத்தாக்கு |
| நிறைமதி | ஆராய்ச்சிப்படம் |
| கோடைக்காலம் | வெள்ளிய |

## கேள்விகள்

1. சூரிய ஒளியால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. எப்பொழுது சூரிய வெளிச்சம் அழகாய்த் தோன்றும்?
3. சந்திரன் ஒளி எவ்வெப்பொழுது மக்களுக்கு மகிழ்ச்சி தரும்?
4. தொலை நோக்காடியின் வழியாகச் சூரியனிடத்து என்னென்ன பார்க்கிறாய்?
5. சந்திரனிடம் காணப்படும் கருமை என்ன என்று எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?



## 6. வக்கம் வீரர் சிதம்பரனுர்

பலவளம் மலிந்த பாண்டி நாட்டின்கண் உள்ள வக்கம் என்ற ஊரிலே ஒரு பழந்தமிழ் மரபிலே 1870-ஆம் ஆண்டில் பிறந்தவர் நம் சிதம்பரனுர். அவர் தந்தையின் பெயர் உலகநாதப் பிள்ளை; தாயின் பெயர் பிரமாயி அம்மை.

இவர் தம்முடைய இளமைப் பருவத்தில் தாய் மொழியாகிய தமிழையும் பிறமொழியாம் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்தார். தம்முடைய இருபத்தெட்டாம் வயதில் தூத்துக்குடிக்குச் சென்று வழக்குரைஞர் பணியை ஏற்று அத்தொழிலைச் சிறப்புடன் நடத்தி வந்தார்.

சிதம்பரனுர் வழக்குரைஞர் தொழிலில் பெரும் பொருள் ஈட்டினர். எனினும், அவர் மனம் பொது நலத்தொண்டிலே ஈடுபடத் துள்ளிக் குதித்துக் கொண்டேயிருந்தது. அவர் தம் தாயகத்திற்கு அரிய சேவை செய்தலே தம் பிறவியின் குறிக்கோளென எண்ணினர்.

இவ்வண்ணம் இவர் விரும்பிக்கொண்டிருக்கும் பொழுது, இதற்குத்தக வட நாட்டில் 1907-ஆம் ஆண்டில் திலகர் பெருமான் சுயராஜ்யக் கிளர்ச்சிப் போரில் தலைமை வகித்தார். அது கேட்ட வீர சிதம் பரனுர் அக்கிளர்ச்சியைச் சார்ந்து தென்னுட்டில் அவ்வியக்கத்தை நடத்தினர். இவருக்குத் துணை யாகச் சுப்பிரமணிய சிவா என்பவரும் இவருடன் கூட்டுறவு கொண்டார். இருவரும் இயக்கக் கூட்டங் களை விமரிசையாக நடத்தினர்கள். இவர்களுடைய பேச்சைக் கேட்க மக்கள் பெருங் கூட்டமாகக் கூடலாயினர்.

1906-ஆம் வருடம் தேசீயக் கப்பற் சங்கம் ஒன்றை இவர் நிறுவினர்; பின்னர், "பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி" என்ற வியா பாரக் குழுவினர் சிங்களத்திற்கும் தூத்துக்குடிக்கும் வியாபாரக் கப்பல்களைச் செலுத்தினர்கள். அக் குழுவினருக்கு இந்தியர் மூலதனம் கொடுத்திருந்தன ராயினும் வெள்ளையரே இலாபத்தை அநுபவித்து வந்தனர். இதைக் கண்டு மனம் பொருத சிதம்பரம் பிள்ளையவர்கள் தேசியக் கப்பற் சங்கத்திற்குப் பல ரிடமும் சென்று பொருள் திரட்டித் தேசியக் கொடி யுடன் கப்பல் ஓட்டினர். இந்த முயற்சியில் அன்னியர்

உண்டாக்கிய இன்னல்களைப் பொருட்படுத்தாது தம் பணியை விடாது நடத்தினர்.

தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்த வீர சிதம்பரனர் 1908-ஆம் வருஷம் சிறையிலிடப் பட்டார். சிறையில் சிதம்பரம் பிள்ளையவர்கள் தானியக் கூழை உண்டும், வேலையாள்போல் பல தொழில் செய்தும், விலங்கிடப்பெற்றும், செக்கு மாடெனச் செக்கிழுத்தும், புல் வெட்டியும், களை யெடுத்தும் பல அல்லல்களை அநுபவித்து வந்தார்.

எனினும், சிதம்பரனர் தம் கொள்கையில் அசைக்க முடியாத குன்றென விளங்கினர். "மனம் போல் வாழ்வு" என்ற நூலைத் தம் சிறைவாசத்தில் எழுதினர்.

1912-ஆம் ஆண்டில் சிதம்பரம் பிள்ளை சிறை யினின்று விடுவிக்கப்பட்டார்; 1920-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்குப் பிரதி நிதியாகச் சென்றிருந்தார். அங்குச் சட்டமன்றம், நிர்வாக மன்றம் முதலிய இடங்களில் வேலை செய்யக் கூடாதென்ற ஒத்துழையாமைக் கொள்கை அங்கு வந்த பலராலும் நிறைவேற்றப்பட்டது. ஒத்துழை யாமைக் கொள்கை அப்பொழுது பயனளிக்காதென்று அவர் பலர் முன்னிலையில் எடுத்து வாதித்தும், அது ஆதரவு பெருமற் போயிற்று. காலப்போக்கில் அவரு டைய கொள்கையையே தேச பக்தர்கள் பின்பற்றி ஞர்கள்.

பல நெசவு சாலைகளும் தேசியப் பண்டக சாலை களும் இவரால் நிறுவப்பெற்றன. அவை அன்னியப்

பொருள்களை வாங்காதபடி தடை செய்து வணிகம் நடைபெற இவர் ஏற்பாடு செய்தார்.

இவரிடம் பல அரிய பண்புகள் குடிகொண்டிருந்தன. இவர் ஆரவாரமின்றி எளிமையாக வாழ்வதை விரும்பினர்; சினமும் செருக்கும் சிறிதுமில்லாதவர்; பிறர் நலம் பேணுபவர்; மக்கள் அனைவரும் சம உரிமை உடையவர் என்ற சீரிய நோக்கினர். மெய்ம்மையையே ஆண்மையாகக் கொண்ட மாபெரும் வீரர் சிதம்பரம் பிள்ளை.

| | |
|---|---|
| பலவளம் மலிந்த | பொருட்படுத்ாது |
| இளமைப் பருவம் | விலங்கிடப்பெற்று |
| குறிக்கோள் | அல்லல் |
| நிறுவினர் | நிறைவேற்றப்பட்டது |
| குழுவினர் | பேணுபவர் |
| மெய்ம்மை | எளிமையாக |
| ஆண்மை | மாபெரும் வீரர் |

**கேள்விகள்**

**1. சிதம்பரனர் தேசியக் கொடியுடன் கப்பலோட்டக் காரணம் என்ன?**

**2. சிறையில் அவர் அடைந்த துன்பங்கள் யாவை?**

**3. சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்தபோது எழுதிய நூல் யாது?**

**4. சிதம்பரம் பிள்ளையின் அருங்குணங்களைக் கூறுக.**

# 7. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

2. காவிரி தென் பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—யென
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

3. முத்தமிழ் மாமுனி நீள்வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு.

4. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.

5. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

6. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு.

—பாரதியார்



# 8. புத்தகமும் சுவடியும்

## புத்தகத்திற்கும் சுவடிக்கும் வழக்கு

**சுவடியார் :** ஐயா, புத்தகத்தாரே, என்ன! இவ்வளவு காலையில் இங்கே வந்திருக்கின்றீரே.

**புத்தகத்தார் :** என்னை ஏடு தேடுகின்றவர் எடுத்துக்கொண்டு வந்தார். சரி. ஆனல், தாங்கள் எப்படி இவ்விடம் வந்து சேர்ந்தீர்கள் ?

**சுவடியார் :** உங்களை எடுத்து வந்தவரே என்னையும் எடுத்து வந்தார்.

**புத்தகத்தார் :** எனக்கு வெகு நாளாக ஒரு சந்தேகம் உண்டு. அச் சந்தேகம் இன்றுதான் நீங்குமென்று எண்ணுகிறேன்.

**சுவடியார் :** என்ன ஐயா, அவ்வளவு பெரிய சந்தேகம் ?

**புத்தகத்தார் :** நம் இருவரில் யார் பெரியவர் என்ற சந்தேகந்தான்.

**சுவடியார் :** சரி. இருவரும் முறை பிறழாமல் எதிர் வழக்கிட்டுப் பார்ப்போம்.

**புத்தகத்தார் :** அப்படியே செய்வோம்.

**சுவடியார் :** நான் இல்லாவிட்டால் நீர் பிறந் திருக்க முடியாது. ஆதலின், நீர் என்னை விடச் சிறியவர்.

**புத்தகத்தார் :** ஏன் பிறந்திருக்க முடியாதென் பதைச் சற்று விவரமாகச் சொல்லும். கேட்போம்.

**சுவடியார் :** நம் நாட்டு மக்கள் முதன் முதலில் குறிப்புக்கள், வரலாறுகள், அறிவியல் நுணுக்கங்கள், கதைகள் யாவும் என் மீதே எழுதினுர்களென்பது யாவரும் அறிந்த விஷயம். நீர்தாம் அறியவில்லை.

**புத்தகத்தார் :** (கோபமாக) அறியவில்லை யென்ற அனுவசிய வார்த்தையைச் சொல்லாதீர். தெளிவாய்ச் சொல்லும்.

**சுவடியார் :** முதன் முதலில் மக்கள் தோற்றம் தமிழ் நாட்டில்தான் என்பது யாவரும் ஒப்புக் கொண்ட ஓர் உண்மை. பாண்டிய நாட்டில் பனை மரம் அதிகம். அதன் ஓலை எழுதுவதற்குத் தகுதி யாயும், நீண்ட நாள் கெடாமலிருப்பதற்கு ஏற்ற தாயும் இருந்தமையால், மக்கள் எதையும் குறித்து வைக்கத் தொடங்கினர். பின்னர், நாள் ஏற ஏற வரிவடிவங்கள் கண்டுபிடிக்கப்பெற்று எதையும் எழுதி வைக்கத் தொடங்கினர். முதலில் முள்ளாலும் பிறகு எழுத்தாணியாலும் எழுதினுர்கள்.

**புத்தகத்தார் :** ஐயா, சுவடியாரே, என் னுடைய விருத்தாந்தத்தைக் கூறுகிறேன், கேட்பீராக.

நான் மிகப் பிற்காலத்தில் தோன்றியவன் என்பதில் சந்தேகமில்லை. அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் எனக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. அதற்கு முன் நீரும் நானும் ஒரே நிலையில்தான் இருந்தோம். ஆனால், ஒன்று கூறுவேன். முன்னால் பிறந்ததால் மட்டும் பெரியவன் என்று சொல்லுதல் தகாது. எப்படி யெனில் முன்னால் பிறந்த காதை விட பின்னால் பிறந்த கொம்பு உறுதியாயிருக்கிறது ; மாடு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சிறந்த ஆயுதமாக உபயோகப்படுகிறது. ஆகவே, தற்காலத்தில் பயன் படும் முறையில் தான் பெரியவன், சிறியவன் என்ற வேறுபாட்டை அறிய வேண்டும்.

**சுவடியார் :** அப்படியானால், நான் இல்லா விட்டால் அரும் பெரு நூல்கள் யாவும் என்பால் இல்லையானால் வெள்ளைத் தாளுக்கு விஷயம் ஏது? புத்தகம் ஏது? ஆகையினால் நான்தான் பெரியவன்.

**ஏடு தேடுவோர் :** நீங்கள் இருவரும் சரி நிகர்ப் பெருமையுடையவர்கள். எவ்வாறெனில், சுவடியார் இல்லை என்றால் விஷயம் இல்லை. புத்தகத்தார் இல்லா விடின் மக்கள் யாவரும் உங்களிடமுள்ள அரிய விஷயத்தை அறிந்து போற்றிப் பரப்ப முடியாது. ஆகவே, நீங்களிருவரும் சம அந்தஸ்து உடையவர்கள்.

| | |
|---|---|
| எண்ணுகிறேன் | வெள்ளைத்தாள் |
| முறை பிறழாமல் | பெருநூல் |
| வழக்கிட்டு | பிறந்திருக்க |
| அனுவசியம் | ஏடு தேடுவோர் |
| சிக்கனம் | முன்னிலையில் |
| அச்சியந்திரம் | |

**கேள்விகள்**

1. முதன்முதல் மக்கள் தோன்றிய இடம் எது ?
2. நூல்கள் எழுத ஏன் பனையோலையை உபயோகித்தனர் ?
3. புத்தகத்திற்கு எதனால் தற்காலத்தில் மதிப்பு ஏற்பட்டுள்ளது ?
4. ஏடுதேடுவோர் எவ்வாறு சமாதானப் படுத்துகிறார்?

# 9. பழய குருடி

"பழய குருடி கதவைத் திற" என்ற பழமொழியைப் பலரும் கேட்டிருப்பீர்கள். ஆனால் இப் பழமொழி எவ்வாறு பிறந்தது என்பதைப் பற்றி ஒரு வரலாறு உண்டு.

காளமேகம் என்பவர் ஒரு புலவர். இவர் தமிழகத்தைச் சேர்ந்த சோழநாட்டின்கண் திரிசிராப் பள்ளியை யடுத்துள்ள திருவானைக்கா என்னும் திருப்பதியில் வாழ்ந்துவந்தார்.

முன்பு மடைத்தொழில் செய்து வாழ்ந்து, பிறகு அகிலாண்டநாயகியின் திருவருளால் கவிபாடும் வன்மை பெற்று "கவிக்குக் காளமேகம்" என்று பல்லோராலும் புகழப் பெற்றார். ஆசுகவி பாடுவதிலும், வசைபாடுவதிலும் இவரை நிகர்ப்பவர் எவரும் அக்காலத்தில் இல்லை. காளமேகப் புலவரின் கூற்று சிறிதும் பொய்க்காமல் உடனே பலிக்கும் என்பர். இவருடைய கவிநயத்தையும், வாக்கின் பயனையும் விளக்கற்பாலனவாகிய கதைகள் பலவுண்டு.

கூத்தாள் என்னும் குருடி ஒருத்தி காளமேகப் புலவரின் மாண்புகளைக் கேள்வியுற்று, அவரால் நலம்

பெற விரும்பி அவரைத் தம் இல்லத்தில் வரவேற்றாள். புலவரும் கூத்தாளின் விருப்பத்திற்கிசைந்து அவளில்லம் சென்று அவளால் உபசரிக்கப்பெற்றார். தம்மை அன்புடன் வரவேற்று அமுதளித்தவளாகிய கூத்தாள் கண்பார்வை யிழந்திருந்ததைப் புலவர் கண்ணுற்றார். பின்பு அவர் அவள்பால் கருணைகூர்ந்து ஒரு கவியைப் பாடினார்; கூத்தாளின் கண்கள் பார்வைபெற்றன.



புலவரின் கருணையையும் மகிமையையும் கண்டு கூத்தாள் களிகூர்ந்தாள்; தன்னைப்போலவே பார்வையற்றவர்களாயிருந்த தன்னுடைய அன்னையையும் தங்கையையும் புலவர்முன் கொணர்ந்து நிறுத்தினாள். அவர்கள்பாலும் கருணைகொண்ட புலவர், மீண்டும் இரண்டு பாக்கள் பாடினார். அக்கணமே அவ்விரு

வரும் பார்வைபெற்றனர். அம்மூவரும் புலவரைப் பலவாறு புகழ்ந்து போற்றியும், அவருக்கு இன்னமுது அளித்தும் உபசரித்து அனுப்பினர்.

அன்றுமுதல் கூத்தாள் இல்லத்தில் மங்களம் தங்கிற்று. திருவருள் நோக்கு சுரந்தது. கூத்தாளின் கூரை இல்லம் மாளிகையாகக் கட்டப்பெற்றது. ஆடை யணிகளும், விளைநிலங்களும் கூத்தாளுக்குக் கிடைத்தன. ஏழைக் கூத்தாள் செல்வி ஆயினள்.

பணம் பெருகியதும் முன் நிலைமையை அவள் மறந்தனள்; செறுக்கும், இறுமாப்பும் கொண்டனள்; ஏழைகளையும், இரப்பவரையும் எள்ள ஆரம்பித்தாள்.

இவ்வாறு இருக்கையில் காளமேகப் புலவர் ஒருநாள் கூத்தாளின் இல்லத்தைக் காணவிரும்பினர். அவள் உயர்வுற்றதைக் கேள்வியுற்று உவப்பு எய்தினர். அவள் மனைவாயிலை அடைந்தார். வாயிற் கதவு உட்புறமாகத் தாளிடப்பட்டிருந்தது. வீட்டினுள்ளே கூத்தாளும் மற்றிருவரும் உற்சாகமாக இருந்ததை உணர்ந்தார். வாயிற்கதவை வெளிப் புறத்தில் தட்டி, அவளைக் கூப்பிட்டார். பன்முறை கூவியும், உள்ளிருந்தோர் 'ஏனென்று' கேட்க வில்லை.

புலவர் குரலை மூவரும் கேட்டனர். எனினும் அவர் செய்த நன்றியை அன்றே மறந்துவிட்டார்கள்; கதவைத் திறந்தால் வறியபுலவர் தம்மைப்பொருள் கேட்கக்கூடும் என்று ஐயங்கொண்டார்கள். ஆகவே வாளாவிருப்பதே தந்திரம் என்று எண்ணினர்கள்.

மூவரின் உள்ளத்தையும் புலவர் ஊகித்தறிந்தார்; நன்றிமறந்தவர்களை நலம் கெடச்செய்வது பழியாகா

தெனக் கருதினர். "பழைய குருடி கதவைத்திற" என்று உரக்கக் கூவினர்.

புலவர் வசை வீணாகுமா? அவர் கூவிமுடிப்பதற்குள் கூத்தாளும் மற்றிருவரும் பார்வையை இழந்து முன்போலாயினர்; தம் குற்றத்தை எண்ணியெண்ணி வருந்தினர். நன்றி மறந்ததால் உண்டான தீய பயனைப் பார்த்தீர்களா?

| | | |
|---|---|---|
| குருடி | திருவருளால் | ஆசுகவி |
| திருப்பதி | நிகர்ப்பவர் | வசை |
| வரவேற்றாள் | கவிநயம் | கூற்று |
| இசைந்து | விளக்கற்பாலன | வாக்கு |
| மகிமை | உபசரிக்க | மாண்பு |
| பார்வை | கொணர்ந்து | கருணை |
| சுரந்தது | இன்னமுது | கூர்ந்து |
| உவப்பு | ஆடையணி | மங்களம் |
| வறிய | எய்தினர் | செருக்கு |
| உள்ளம் | ஐயம் | இறுமாப்பு |
| மடைத்தொழில் | யூகித்து | வாளா |

தெரிந்துகொள் :—

1. ஆண்பால் — பெண்பால்

| | | |
|---|---|---|
| குருடன் | — | குருடி |
| ஒருவன் | — | ஒருத்தி |
| செல்வன் | — | செல்வி |

2. வாக்கியங்களில் அமைக்க :

ஐயம், திருப்பதி, வாளா, பழி, மகிமை.

### கேள்விகள்

1. "பழய குருடி கதவைத்திற" என்ற பழமொழி யாரால் கூறப்பட்டது?

2. அவர் ஏன் அவ்வாறு கூறினர்?

3. காளமேகப் புலவர் எவ்வாறு புலமை பெற்ருர்?

4. காளமேகம் கூற்று பொய்யாகாதென்பதை எவ்வாறு விளக்குவாய்?

5. இக்கதையிலிருந்து உணரப்படும் நீதி யாது?

## 10. தேனீ வளர்த்தல்

தேனீ வளர்த்தல் மக்களுக்கு இலாபத்தைக் கொடுக்கக்கூடிய தொழிலாகும். கிராமங்களில் திறந்த வெளிகள் அதிகமாகக் காணப்படுகின்றன; பூக்கள் நிரம்பக் காணப்படுகின்றன. ஆகையினுல் குடியானவர்களும் மற்றுமுள்ளவர்களும் தேன் கூட்டின் உதவியால், தேனீக்கள் வளர்த்துத் தேன் சேகரித்து வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம்.

ஒரு தேன் கூட்டில் சுமார் 30000 ஈக்கள் முதல் 40000 ஈக்கள் வரையில் இருக்கும். தேனீக்கள் வசிக்கும் வீட்டைத்தான் தேனடை என்று சொல்லுகிரேும். தேன் கூட்டில் பல அறைகள் உண்டு. அவ்வறைகளில் ஈக்கள் தங்களுக்கு வேண்டிய உணவு, மகரந்தம், தேன் முதலியவற்றைச் சேர்த்து வைத்துக்கொள்ளுகின்றன. வேலைக்கார ஈக்கள் தங்கள் உடலில் உண்டாகும் மெழுகால் தேனடையைக் கட்டுகின்றன.

தேன் மெழுகு ஈக்களின் அடிப்புறத்தில் உண்டாகிறது. இவ்வித மெழுகு உண்டாவதற்கு ஈக்கள் முதலில் தேனைக் குடிக்க வேண்டும். இத்தேன் மெழுகாக வெளிவரும்; இதைத் தங்கள் தாடைகளின் துணைகொண்டு சுரண்டித் தேனடைகளாகக் கட்டும்.

தேனீக்கள் மூன்று வகைப்படும்; அவை இராணி ஈ, ஆண் ஈ, வேலைக்கார ஈ என்பவை. இராணி ஈயே தேன் கூட்டின் தலைவி ஈ. அதன் முக்கிய வேலை முட்டையிடுதல்தான். ஆண் ஈயின் வேலை இனப் பெருக்கம் செய்தலே. வேலைக்கார ஈக்களின் முக்கியத் தொழில், தேன், மகரந்தப்பொடி சேகரித்தல், வீடு அமைத்தல், முட்டைகளைப் பாதுகாத்தல் முதலியனவாகும். மற்றும் அவை கூட்டைப் பாதுகாப்பதும், பழுது பார்ப்பதும், பகைவர்களைத் தாக்குவதும், கோடைக் காலங்களில் வெப்பம் மிகுதியாயிருந்தால், தங்கள் இறக்கைகளால் விசிறி, புழுக்களைக் காப்பாற்றுவதும் உண்டு.

பூக்களிலிருந்து ஈக்களால் எடுக்கப்படும் தேனும், தேனடைகளில் இருக்கும் தேனும் ஒன்று அன்று என்பதை உணரவேண்டும். ஏனெனில், பூக்களில் உள்ள தேனை ஈக்கள் நன்றாகக் குடிக்கின்றன. பின்னர் அத்தேன் வயிற்றினுள் சென்று சில மாறுதல்களை அடைகின்றது. பின்பு, வெளியே கக்கப்படுகிறது. அடையிலிருக்கும்போதும் தேன் மாறுதல் பெறுகின்றது. இவ்வாறு மாற்றம் அடைந்த தேனையே நாம் எடுக்கிறோம்.

தேனெடுத்தல் இரண்டு வகைப்படும்; அவை இயற்கை முறையில் தேனெடுத்தல், செயற்கை முறை

யில் தேனெடுத்தல் என்பனவாகும். மரப்பொந்து களிலும் பாறைகளிலும் ஈக்கள் தேன் கூடுகள் கட்டு கின்றன. அக்கூடுகளிலுள்ள ஈக்களை நெருப்பு, பச்சிலை முதலியவற்றின் உதவிகொண்டு துரத்தி விட்டுத் தேனடைகளை எடுத்துப் பிழிந்து தேனை எடுப்பார்கள். அவ்வறைகளில் சில ஈக்கள் இறக் கின்றன. ஆதலின், அத்தேன் அவ்வளவு சுத்தமாய் இராது.

இவ்வித உயிர்ச் சேதம் ஏற்படாத வகையில் செயற்கை முறையைக் கையாளலாம். இயற்கைத் தேன் கூடுகளைப் போலவே செயற்கை முறையில் தேன் கூடுகளைச் செய்து, அக்கூடுகளில் தேன் ஈக் களைக் கொண்டுவந்து விட்டு வளர்த்துவரின், அவை அதில் தேன் சேகரித்து வைக்கும். தேன் சேகரித்து வைக்க மேலே சட்டங்கள் இருக்கும். அச்சட்டங் களில் தேன் இருப்பதை நன்ருக வெளியே இழுத்துப் பார்க்கலாம். அத்தேனை, தேனெடுத்தற்குரிய ஒரு சுழலும் சக்கரத்தில் வைத்துச் சுழற்றிஞல், தேன் மட்டும் எடுபடும். அது மிக தூயதாய் இருக்கும். ஆதலின், இப்பொழுது பலராலும் இம்முறை கையாளப்படுகிறது.

முட்டையிலிருந்து வெளி வரும் புழுக்கள் ஆண் ஈக்களாகவும், பெண் ஈக்களாகவும், வேலைக்கார ஈக் களாகவும் மாறுவதற்கு மிகச் சிறந்த முக்கிய கார ணம், அப்புழுக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருளே ஆகும். இராணி ஈயின் ஆயுட் காலம் மூன்று ஆண்டே.

| | | |
|---|---|---|
| சேகரித்து | சுரண்டி | துப்புரவு |
| மகரந்தம் | இனப்பெருக்கம் | கையாளப்படுகிறது |
| வருவாய் | பாதுகாத்தல் | மிகச் சிறந்த |
| பெருக்கிக்கொள்ள | கோடைக்காலம் | ஆயுட் காலம் |
| தேனடை | தேனெடுத்தல் | மூன்று ஆண்டே |
| மெழுகால் | சட்டங்கள் | |

### கேள்விகள்

1. தேனீக்கள் கூடுகளில் என்னென்னவற்றைச் சேகரித்து வைக்கின்றன ?

2. மெழுகு உண்டாகும் விதம் யாது ?

3. தேனீக்களின் வகைகளைக் கூறி, ஒவ்வொன்றின் வேலையையும் கூறுக.

4. பூத் தேனுக்கும் அடைத் தேனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

5. செயற்கைத் தேன் எவ்வாறு உண்டாக்கப்படுகிறது ?

1782—2




## 11. கூட்டுறவுப் பண்டகசாலை

**ஜெம்மி :** மேரி, பாவாடை புதிதாகத் தைத்தாயா? துணி நேர்த்தியாக இருக்கின்றதே. இது கஜம் என்ன விலை? எங்கே வாங்கினுய்?

**மேரி :** நான் என் அத்தை வீட்டிற்குப் போயிருந்தேன். என் அத்தை ஊரில் ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை நடைபெறுகிறது. நமக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் அக்கடையில் சில்லரையில் விற்கப்படுகின்றன. நியாயமான விலைக்குக் கொடுக்கிருர்கள்.

**ஜெம்மி :** என்னென்ன சாமான்கள் அக்கடையில் விற்கப்படுகின்றன?

**மேரி :** மளிகைச் சாமான்கள், துணிகள், விளக்குகள், கண்ணுடிகள், சோப்புகள், மருந்துகள், உழவுக் கருவிகள், எரு உப்புக்கள், சிமெண்டு ஆகிய பற்பல பொருள்களும் அங்கு விற்கப்படுகின்றன.

**ஜெம்மி :** அக்கடையை நடத்துபவர் யார்? முதலாளி யார்?

**மேரி :** அவ்வூரில் ஒரு கூட்டுறவுச் சங்கம் நடைபெறுகிறது. அவர்கள் அக்கடையை நடத்துகிருர்கள். அச்சங்கத்திற்குப் பல அங்கத்தினர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எல்லோரும் அக்கடைக்கு முதலாளிகள்.

**ஜெம்மி :** அங்கத்தினர்கள் எல்லோரும் முதலாளிகள் என்கிருயே. அது எவ்வாறு?

**மேரி :** ஆம். அக்கடைக்குப் பதினுயிரம் ரூபாய் முதல் வைக்கப்பட்டிருக்கிறது. அத்தொகை முழுவதும் குறிப்பிட்ட ஒரு நபருடையது அன்று, பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் ஆயிரம் பங்குகள் பிரித்திருக்கிருர்கள். ஏழைகளும் குறைந்தது ஒரு பங்கு எடுத்துக் கொள்ளலாம். பல பேருடைய பங்குத் தொகையே அப்பண்டகசாலேக்கு முதல் தொகை. ஆகையால், பங்குதாரர்களாகிய அங்கத்தினர்கள் எல்லோரும் முதலாளிகளே.

**ஜெம்மி :** சங்கத்தார்கள் அப்பண்டகசாலேயை எவ்வாறு நடத்துகிருர்கள்?

**மேரி :** அச்சங்கத்தில் இருநூறு அங்கத்தினர்கள் இருக்கின்ருர்கள். அவர்கள் தமக்குள் பதினைந்து பேர்களே நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுத்து இருக்கிருர்

கள். அந்த நிர்வாகிகளுள் ஒருவர் சங்கத் தலைவர்; மற்றொருவர் துணைத் தலைவர்; வேறொருவர் செயலாளர். நிர்வாகக் கூட்டத்தார்கள் பண்டகசாலை செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி அப்போதைக்கப் போது பேசி முடிப்பார்கள். தலைவர்களும், செயலாளரும் அக்காரியங்களை நிறைவேற்றுவார்கள்.

**ஜெம்மி :** கடையில் வியாபாரம் செய்வது முதலிய வேலைகளைச் செய்பவர்கள் யாவர்?

**மேரி :** விற்பனையாளர், கணக்கர், சிப்பந்தி என்று மூன்று பேர் அக்கடையில் வேலை செய்கிறார்கள். அவர்கள் கடை வேலைகளைச் செய்கிறார்கள். சங்கத்தார் அவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுக்கிறார்கள்.

**ஜெம்மி :** தனிப்பட்ட முதலாளிகள் பலர் கடைகளை நடத்துகிறார்களே. கூட்டுறவுப் பண்டகசாலை எதற்கு?

**மேரி :** கூட்டுறவுப் பண்டகசாலையார் சாமான்களை அவை ஆக்கப்படும் இடங்களிலிருந்து நேராகவும், மொத்தமாகவும் தருவிக்கிறார்கள். அவர்களுக்குக் கொள்முதல் விலை குறையும். அளவாக இலாபம் வைத்து விற்கிறார்கள்.

தனிப்பட்ட முதலாளிகள் எல்லோரும் சாமான்களை நேராக வருவிக்க முடியாது. சில பெரிய வியாபாரிகள் சாமான்களை நேராகத் தருவிப்பார்கள். அவர்கள் சில்லரை வியாபாரிகளுக்கு விற்பார்கள். சில்லரை வியாபாரிகள் குடிகளுக்கு விற்பார்கள். பல கைகள் மாறுவதால் சாமான்களின் விலை ஏறும்.

சில முதலாளிகள் தம் விருப்பம் போல் அதிக லாபம் வைத்து விற்பார்கள். ஓர் ஊரில் ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை இருந்தால், மற்றக் கடைக்காரர்களும் சாமான்களை நியாயமான விலைக்கு விற்பார்கள்.

**ஜெம்மி :** நிர்வாகிகள் அப்பண்டக சாலைகளைத் தம் இஷ்டம் போல் நடத்தலாமா?

**மேரி :** சர்க்காரில் கூட்டுறவு இலாகா அமைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு இலாகாவின் அதிகாரிகள் அப்பண்டக சாலைகளின் வேலைகளைச் சரியாக நடக்கும்படி கவனிப்பார்கள்.

**ஜெம்மி ;** குடிகள் முதல் போட்டு அப்பண்டக சாலைகளை நடத்துகிறார்கள். அவற்றின் வேலைகளில் சர்க்கார் ஏன் தலையிடுகிறார்கள்?

**மேரி :** சர்க்காருடைய மேற்பார்வை இருந்தால் வேலைகள் ஒழுங்காக நடைபெறும். கொள் முதல் செய்வதற்குத் தொகை போதாவிட்டால், சர்க்கார் கூட்டுறவு நிதியின் மூலமாகக் கடன் கொடுத்து உதவுகிறார்கள். ஆகையால், கூட்டுறவுப் பண்டகசாலைகளை அவர்களும் கண் காணித்து வருகிறார்கள்.

**ஜெம்மி :** இலாபத் தொகையை யார் எடுத்துக் கொள்வார்கள்?

**மேரி :** ஆண்டிற்கு ஒரு முறை பண்டகசாலையின் வரவு செலவுகள் கணக்கு முடிக்கப்படும். இலாபத் தொகையைப் பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பார்கள்.

**ஜெம்மி :** மேரி, கூட்டுறவுப் பண்டகசாலையால் குடிகளுக்குப் பல நன்மைகள் இருக்கின்றனவே. நம் ஊரிலும் ஒன்று ஏற்படுவது நலம் அல்லவா?

**மேரி :** ஆம், என் தகப்பனுர் கூட அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறுர். சில மாதங்களில் இவ்வூரிலும் ஒரு கூட்டுறவுப் பண் டகசாலை ஏற்படுத்தப்படலாம்.

**கேள்விகள்**

1. நீ பாரத்த ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையில் விற்கப்படும் முக்கியமான பொருள்களைக் கூறு.

2. கூட்டுறவுப் பண்டகசாலை எவ்வாறு அமைக்கப் படுகிறது ?

3. இப்பண்டகசாலையால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

## 12. நுண்ணிய கருமமும் எண்ணித்துணி

ஒரு நாள் ஒரு சந்நியாசி தமக்கு அறிமுகமுள்ள பிரபு ஒருவரைக் காணச் சென்றுர். அப்பிரபு கற்ற வர்களை மதிப்பவர். பெரியோர் சொல்லைக் கேட்பவர் ; சான்றேர்களை ஆதரிப்பவர்.

சந்நியாசியின் வருகையைக் கண்டதும் பிரபு அவரை இன்சொல் கூறி வரவேற்றுர். இருக்கை அளித்து அவரை உபசரித்தார். பிரபுவின் பெருந் தன்மையைக் கண்ட அச்சந்நியாசி அவருக்கு ஒரு நல்லுரையைக் கூற விரும்பினுர். “ பிரபுவே உமக்கு நான் ஓர் அரிய உபதேசம் செய்கிறேன். ஏழைக ளுக்கு உணவு அளிப்பதற்காக என்பால் ஒரு நூறு ரூபாய் அறமாக அளிப்பீராக ” என்றுர். பிரபு அவ் வாறே செய்ய ஒப்புக் கொண்டார். நூறு ரூபாய் நோட்டு ஒன்றை உடனே அவரிடம் கொடுத்தார்.

அதைப் பெற்றுக் கொண்டதும் அத்தூயவர் தாம் எழுதி வைத்திருந்த ஓர் ஓலைச்சுருளைப் பிரபுவிடம் கொடுத்தார். பிறகு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அகன்றார்.

சந்நியாசி சென்ற பிறகு அப்பிரபு அவ்வோலைச் சுருளைப் பிரித்துப் பார்த்தார். அதில் "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்று எழுதப் பெற்றிருந்தது. அச்சுருளைத் தம் காரியஸ்தரிடம் காண்பித்தார். அதைப் படித்துப் பார்த்ததும் அவர் "பிரபுவே இதற்குத்தானா நூறு ரூபாய்? சந்நியாசி யார் தங்களை ஏமாற்றி விட்டார் போலும்" என்றார். "காரியஸ்தரே அவ்வாறு எண்ணற்க; பெரியோர் வார்த்தை உற்றபோது உதவும்" என்றார். உடனே அவர் தம்முடைய வீட்டின் சுவர்களிலும், மற்ற எல்லாப் பொருள்களிலும் "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்று எழுதி வைத்தார்.

நாட்கள் பல கழிந்தன. ஒருநாள் காலையில் அவர் வழக்கம் போல் சிகைமுடி திருத்திக் கொள்ள நாவிதன் முன் அமர்ந்தார். அந்நாவிதன் முதலில் ஓர் சூரியை எடுத்துத் தீட்டினான். அப்போது அருகே இருந்த கிண்ணத்தில் "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்ற வாசகத்தைக் கண்டான். உடனே அவன் அச்சூரியை உரைக் கூட்டில் வைத்துவிட்டு வேறொரு சூரியை எடுத்துத் தீட்ட ஆரம்பித்தான். நாவிதனுடைய செய்கையைக் கண்ட பிரபு அவன்மீது ஐயம் கொண்டார். அவனுடைய முகத்தில் தெளிவான தோற்றம் காணப்படவில்லை. "என்ன செய்கையைச் செய்தாய்; முதலில் எடுத்த

சூரியை ஏன் கீழே வைத்தாய்? உள்ளதை உள்ள வாறு உரை'' என்று சினங்கொண்டு எழுந்தார்.

நாவிதன் நடுக்கமுற்றான்; பணிவுடன் எழுந்து நின்றான். ''ஐயனே, என்னை மன்னித்தருள்க; தங்கள் பகைவர் நேற்று என்பால் வந்தனர். நஞ்சு தோய்த்த சூரியொன்றை என்னிடம் கொடுத்தனர். தங்கள் சிரசில் ஒரு சிறு காயத்தைச் செய்துவிடும்படி உரைத்தனர். அவ்வாறு செய்தால் எனக்கு நிரம்பப் பொருள் தருவதாகவும் பகர்ந்தார்கள். பொருளாசை யால் நான் மதியிழந்து, அவர்களுடைய கூற்றிற்கு இசைந்தேன். கிண்ணத்தில் எழுதப் பெற்றிருந்த வாசகம் என் கண்ணிற்பட்டது. உடனே நான் செய்யத் துணிந்தது நன்றன்று என்று உணர்ந் தேன். நஞ்சு தோய்த்த சூரியை உரையினுள் இட்டு விட்டேன். வேறு தூய சூரியைக் கையில் எடுத் தேன்'' என்றான்.

பிரபுவின் சினம் களிப்பாக மாறிற்று; செய்தது குற்றமேயாயினும் உண்மை யுரைத்த நாவிதனை மன்னித்தார்; பின்னர் எந்நாளும் அவ்வாறு மதி யிழக்காதவாறு நன்மொழிகள் கூறினார். இறைவன் அருளையும், சந்நியாசியின் நன்றியையும் போற்றி னார். நிகழ்ந்தவைகளைப் பற்றித் தம் காரியஸ்தரிடம் அறிவித்தார். காரியஸ்தரும் அப் பெரியவரைப் புகழ்ந்து வாழ்த்தினார்.

| | | |
|---|---|---|
| சந்நியாசி | அறிமுகமுள்ள | இன்சொல் |
| சான்றோர் | இருக்கை | உபதேசம் |
| வருகை | தூயவர் | காரியஸ்தர் |
| அறமாக | ஓலைச்சுருள் | எண்ணற்க |
| சிகைமுடி | அமர்ந்தார் | சூரியை |
| வாசகம் | உரைக்கூடு | தீட்ட |

| | | |
|---|---|---|
| நடுக்கமுற்றுன் | மன்னித்தருள்க | நஞ்சுதோய்த்த |
| பகர்ந்தார்கள் | மதியிழந்து | கூற்றிற்கு |
| இசைந்தேன் | நன்மொழி | இறைவன் |

**கேள்விகள்**

1. ஓலைச்சுருளில் என்ன வாசகம் காணப்பட்டது? அதைக் கண்ட காரியஸ்தர் என்ன கூறினர்?

2. பிரபு கூறிய மறுமொழி யாது?

3. பிரபு நாவிதன்மேல் ஏன் சினங்கொண்டார்? நாவிதன் யாது கூறினன்?

## 13. பிறப்புக்கள்

இவ்வுலகத்தில் காணப்படும் படைப்புக்கள் பல. அவைகளைப் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன உயிருள்ளவை, உயிரில்லாதவை என்பன. கல், மண், தீ, நீர், முதலியவை உயிரில்லாதவை.

உயிருள்ளவைகளைப் பின் கண்டவாறு பல வகைகளாகப் பிரிக்கலாம். உயிர் உள்ளவை உணவை உட்கொள்ளும்; வளரும். அவைகள் அறிவு உடையவை. அறிவை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவை உணர்தல், பார்த்தல், கேட்டல், சுவையறிதல், நாற்றம் அறிதல் என்பவை ஆகும். இவ்வைந்து அறிவுகளும் இயற்கை அறிவுகள் எனப்படும். இவ்வைந்திற்கும் மேற்பட்டது பகுத்தறிவு. பகுத்தறிவு ஆறுவது வகை அறிவாகும். பகுத்தறிவாவது

நல்லன தீயனவற்றை அறிவது. அஃது மனிதர்க்கு மட்டுமே உண்டு. ஆகையால் மனிதர்கள் ஆறறிவு உடையவர்.

உயிருள்ளவைகள் பிறப்பும், இறப்பும் உடையவை. ஆகையால் அவைகளைப் பிறப்புக்கள் என்றும் கூறுவர்.

தாவரங்கள் ஒரு வகைப்பிறப்பு ஆகும். தாவரங்கள் ஓரிடத்திலேயே இருக்கும் இயல்புடையவை. அவை இடம் விட்டு இடம் பெயரமாட்டா.

புழு, பூச்சிகள் மற்றொரு வகை. புழுக்கள் ஊர்ந்து செல்வன. அவைகளின் உடலில் எலும்புகள் கிடையா. உடல் முழுவதும் தசைகளால் ஆனவை. பூச்சிகளுக்கும் எலும்புகள் கிடையா.



பூச்சிகள் பறக்கும் தன்மை உடையவை. பூச்சிகள் முட்டை இடும். முட்டையில் இருந்து முதலில் புழுக்கள் வெளிப்படும்; பிறகு அவை பூச்சியாக ஆகும். பூச்சிகள் பொதுவாக ஆறு கால்களும், இறக்கைகளும் உடையவை.

சில பூச்சிகளுக்கு நான்கு கால்களே இருக்கும். சில பூச்சிகளுக்கு இறக்கைகள் இரா. பூச்சிகளின் உடலில் மூன்று பிரிவுகள் காணப்படும். "பூநக்கிக்கு ஆறுகால்" என்பர் புலவர்.

பறவைகள் ஒரு வகைப் பிறப்பாகும். பறப்பது என்பது அவைகளுக்குப் பொதுவான குணம்.



ஆகையால் பறவை என்ற பெயர் உண்டாயிற்று. பறவைகள் முட்டை இடும்; பறவைகள் இரண்டு கால்களும், இறக்கைகளும் உடையவை. அவைகள் கூடுகளிலும், பொந்துகளிலும் வசிக்கும்.

நீர் வாழ்வன என்பன ஒரு வகை. நீர் வாழ்வன



வற்றுள் மீன்கள் மிக முக்கியமானவை. மீன்களில் எண்ணிறந்த வகைகள் உண்டு. அவை எப்போதும்

நீரிலேயே வாழும். நீருக்குள் கலந்திருக்கும் பிராண வாயுவைச் சுவாசிக்கும். அவை குளிர்ந்த இரத்தம் உடையவை.

விலங்குகள் என்பன மற்ருெரு வகை. இவை நடமாடும் இயல்பு உடையன. இவைகளுக்கு நடப் பன என்றும் பெயர் வழங்கும். விலங்குகள் நான்கு



கால்களும் ஒரு வாலும் உடையவை ; குட்டி போட்டுப் பால் கொடுப்பவை.



பாம்பு, முதலியன ஊர்வன என்ற பிறப்பாகும்.

பிறப்புக்கள் எல்லாவற்றிலும் மனிதப் பிறப்பே சிறந்தது. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்த லரிது' என்ருர் ஔவையாரும். மற்றப் பிராணிகள் எல்லாம் தத்தம் இயற்கை அறிவைப் பெருக்கிக் கொள்ளவோ, நல்லன தீயன அறியவோ முடியாது.

மனிதர்கள் தங்கள் பகுத்தறிவினால் நன்மை தீமைகளை அறிகிறார்கள். இயற்கை அறிவுகளைப் பெருக்கிக் கொள்கிறார்கள். தங்களுக்கு வேண்டிய வசதிகள் பலவற்றையும் புதியன புதியனவாக ஆக்கிக் கொள்கிறார்கள். ஆனால் அவ்வறிவைக் கொண்டு எவ்வுயிர்க்கும் நன்மையே செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| படைப்பு | இயற்கை அறிவு | நாற்றம் |
| பிறப்பு | பகுத்தறிவு | ஊர்ந்து |
| தசை | பொந்து | பூ நக்கி |

**கேள்விகள்**

1. இயற்கை அறிவுகள் ஆவன யாவை?
2. பகுத்தறிவு என்பது என்ன?
3. உயிருள்ளவைகளின் தன்மைகள் யாவை?
4. மனிதர் பகுத்தறிவினால் அடையும் பயன்கள் யாவை?

# 14. சதகங்கள்

## (1) நல்வினைஞ் சேர் பயன்

சந்தன விருக்ஷத்தை அண்டிநிற் கின்ற பல
தருவுமவ் வாசனை தரும்
தங்க மக மேருவை அடுத்திடுங் காக்கையுஞ்
சாயல் பொன் மயமே தரும்.

பந்தமிகு பாலுடன் விளாவிய தண்ணீரெலாம்
பால்போல் நிறங் கொடுக் கும்
படிகமனி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங் கொடுக் கும்

அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடில்
அடுத்ததும் பசுமை யாகும்
ஆனபெரி யோர்களொடு சகவாசம் அதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர் காண்.

மந்தர நெடுங் கிரியின் முன்கடல் கடைந் தஅரி
மருக மெய்ஞ் ஞான முருகா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே.

## (2) சிறுமையிற் பெருமை

சேற்றில் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக் கும்
திகழ்சிப்பி உடலில் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக் கும்.

போற்றி யிடு பூச்சியின் வாயின் நூல் பட்டென்று
பூசைக்கு நேசமா கும்
புகலரிய வண்டெச்சி லான தேன் தேவர்கொள்
புனிதஅபி டேக மாகும்.

சாற்றிய புலாலொடு பிறந்த கோ ரோசனை
சவாது புனு கனைவர்க்கு மாம்
சாதியீ னத்தில் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின் மேல் வட்டம் அன்றோ

மாற்றிச் சுரத்தினை வீபூதியால் உடல் குளிர
வைத்த மெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேச னே.

## (3) இதற்கு இது வேண்டுமெனல்

தனக்குவெகு புத்தியுண் டாயினும் வெறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டும்;
தானதிக சூரனே யாயினுங் கூடவே
தளசேக ரங்கள் வேண்டும்;
கனக்கின்ற வித்துவானாயினும் தன்னினுங்
கற்றோரை நத்த வேண்டும்; [வாசலிற்
காசினியை யொரு குடையி லாண்டாலும்
கருத்துள்ள மந்திரி வேண்டும்;

தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலும்
சுதிகூட்ட வொருவன் வேண்டும்;
சுடர் விளக் காயினும் நன்றாய் விளங்கிடத்
தூண்டு கோ லொன்று வேண்டும்;

அனற்கண்ணனே! படிக சங்கநிகர் வண்ணனே!
ஐயனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினே தருசதுர கிரிவளர்
அறப்பளி சுரதேவனே!

## 15. சிலப்பதிகாரம்

கோவலன், கண்ணகி நாடகத்தையும், படக் காட்சியையும் பலரும் பார்த்திருப்பார்கள். அவ்வர லாறு சிலப்பதிகாரம் என்னும் காவியத்தில் கூறப் படுகிறது. அக்காவியத்தை எழுதியவர் இளங்கோ வடிகள் என்னும் புலவர். இளங்கோவடிகள் சுமார் ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே சேர நாட்டில் வாழ்ந்தார்.

கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டி னத்தைச் சேர்ந்தவர்கள். கோவலன் கண்ணகியின் கணவன்; கண்ணகி கோவலனுடைய மனைவி. அவர்கள் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர்கள். கோவலன் தன் தீய நெறியில் தன்னிடமிருந்த செல்வப் பொருளை அழித்து விட்டான். பிறகு வாழ்ந்த ஊரில் தாழ்ந்திருத்தல் கூடாதென்று கருதி, காவிரிப்பூம்பட்டினத்தை விட்டகன்றான். கண்ணகி யும் அவனுடன் சென்றாள். இருவரும் மதுரைமா நகரை அடைந்தனர். அப்போது கண்ணகியிடம் இரண்டு சிலம்புகளே இருந்தன. அவைகளில் ஒன்றை விற்று, அதில் வரும் தொகையைக்கொண்டு, வர்த்தகம் செய்து பிழைக்க எண்ணினார்கள். கண் ணகியை ஓர் இல்லத்தில் இருக்கச் செய்து, கோவலன் ஒரு சிலம்பை விற்பதற்காகக் கடை வீதிக்குச்

சென்றான். போகும் வழியில் அவன் ஒரு பொற் கொல்லனைக் கண்டான். அவன்பால் கோவலன் சிலம்பைக் காட்டினான். அந்தப் பொற்கொல்லன் தூயவன் அல்லன். சின்னாட்களுக்கு முன்னர் பாண்டியனுடைய அரண்மனையிலிருந்து ஒரு சிலம் பைத் திருடியவன். அத்திருட்டு வெளியாவதற்குள் யார்மீதாவது அப்பழியைச் சாற்ற யோசித்துக் கொண்டிருந்தான்.

புதியவனாகிய கோவலனைக் கண்டதும் அவன் தன் மனத்தில் கெட்ட எண்ணம் எண்ணினான். அவன் வைத்திருந்த சிலம்பு பார்வைக்கு அரசியி னுடைய சிலம்பேபோல் தோன்றிற்று. கோவலனைத் தன் இல்லத்தில் சிறிது இருக்கச் சொல்லி, அரண் மனையை அடைந்தான். "அரசே, சிலம்பு திருடிய கள்வன் அகப்பட்டு விட்டான்; அவனை என்னுடைய வீட்டில் இருக்கச் செய்துள்ளேன்" என்றான்.

பாண்டியன் விதிவசத்தால் நாகுழறி "அவனைக் கொண்டு சிலம்பு கொணர்க" என்பதற்குப் பதிலாக "அவனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க" என் றான். ஏவலாளர்கள் அவ்வாறே நிறைவேற்றி விட் டார்கள்.

கோவலன் கொலையுண்ட செய்தி நகரெங்கும் பரவிற்று. கண்ணகியும் அச் செய்தியைக் கேட்டுக் கதறிப் புலம்பிக்கொண்டு ஓடினாள்; கோவலனைப் பிணக்கோலத்தில் கண்டு புலம்பினாள்; அரண்மனை வாயிலை அடைந்தாள்; கோவலன் வைத்திருந்த சிலம்பு தன்னுடையது என்பதை விளக்கிக் காட்டினாள்.

தான் சிந்தியாது கூறிய கட்டளையால் நேர்ந்த பழியை அரசன் உணர்ந்தான். "நீதி தவறியொருவனைக் கொன்ற யானும் பிழைப்பதோ" என்று, கூறி அரியணையிலிருந்து கீழே விழுந்தான். அக்கணமே அவனுடைய உயிர் உடலைவிட்டு நீங்கிற்று. அரசன் இறந்த வரலாற்றைக் கேட்ட அரசியும் இறந்தனள். கண்ணகியின் சினத் தீயால் மதுரைமாநகரமும் எரியுண்டது.

பிறகு கண்ணகி சேரநாட்டை அடைந்தனள். அங்கோர் மலையின்மீது சென்று நின்று, கணவனையே சிந்தித்தவளாய், பட்டினிநோன்பு இருந்து இறந்தனள். சேரமன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்கு ஒரு கோயிலைக் கட்டினான். பத்தினிக் கடவுள் என்று அவள் வணங்கப்படுகிறாள்.

| | | |
|---|---|---|
| நாடகம் | வணிகர்குலம் | பொற்கொல்லன் |
| காட்சி | தீயநெறி | விட்டகன்றான் |
| காவியம் | செல்வப்பொருள் | ஏவலாளர்கள் |
| சிலம்பு | விதிவசம் | நிறைவேற்றி |
| தூயவன் | நா குழறி | கொலையுண்ட |
| புலம்பினாள் | பிணக்கோலம் | அரியணை |
| கட்டளை | பழியை | அக்கணமே |
| சினத்தீ | எரியுண்டது | பத்தினிக் கடவுள் |

## கேள்விகள்

1. கண்ணகியும் கோவலனும் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?
2. அவர்கள் ஏன் மதுரைக்குச் சென்றார்கள்?
3. பொற்கொல்லன் செய்த கொடுமை யாது?
4. அரசன் செய்த தவறு யாது?
5. கண்ணகி எவ்வாறு வணங்கப்படுகிறாள்?

# 16. பட்டு

நம் தேசம் உஷ்ண நாடு. இந்த நாட்டிற்கு ஏற்ற உடை பருத்தியாடையே யாகும். சீமான் களும் ஏழைகளும் பருத்தி ஆடைகளை உடுத்துகின் றனர். சிலர் பருத்தி ஆடையில் பட்டுக் கரை சேர்த்து உபயோகிக்கின்றனர். புனித காரியங்களைச் செய்யும்போது முழுப் பட்டினால் நெய்த ஆடை யையே பயன்படுத்துகின்றனர்.

ஆண்பாலரில் பட்டாடைகளைக் கட்டுபவர் சிலரே யாயினும், செல்வவான்களின் பெண்மணிகள் பட்டுப் புடவைகளை அதிகமாக உபயோகிக்கின்றனர். நம் நாட்டில் பெண்களுக்காகத்தான் பட்டு நெய்யப்படு கின்றது என்று கூறுவது மிகையாகாது.

ஒரு வகைப் புழு தனது படுக்கைக்காக நூற்கும் நூலே பட்டு எனப்படும். பட்டுப் புழு முசுக்கட்டைச் செடிகளில் பெரும்பாலும் வசிக்கும். முசுக்கட்டை இலைகளே அதற்கு உணவு. அவ்விலைகளைத் தின்று அது வளர்ச்சி அடையும். சில நாட்களில் அதன் உடலிலிருந்து மெழுகு போன்ற ஒரு வகைப் பசை வெளிப்படும். அப்பசையைக் கொண்டு தன் வாயி னால் நுண்ணிய இழைகளை இழைக்கும். அவ்விழை யைக்கொண்டு அது தன்னைச் சுற்றி ஒரு நேர்த்தி யான கூட்டை அமைக்கும். கூட்டை அமைத்து முடிந்தபின் அது அக்கூட்டினுள்ளேயே சில நாட்கள் கிடக்கும். அந்நாட்களில் சிறிது சிறிதாகத் தன்னு டைய உருவத்தில் மாறுபடும். கடைசியாகப் பூச்சி யின் உருவம் பெற்று, கூட்டைக் கிழித்துக்கொண்டு

வெளியே வரும். அதுவே **பட்டுப் பூச்சி** என்பது. பட்டுப் பூச்சி பல முட்டைகளை இடும். அம்முட்டைகளிலிருந்து பட்டுப் புழு வெளிவரும்.

பட்டுப் புழு பூச்சியாக மாறி வெளியே வருவதற்குள், மனிதர்கள் அவற்றின் கூடுகளை எடுத்து, அதிக சூடு இல்லாத வெந்நீரில் போடுவார்கள். கூட்டினுள் உள்ள புழுக்கள் இறந்து விடும். அக்கூட்டை அறுபடாமல் பிரித்து நூலை எடுத்துக் கொள்வார்கள். இவ்வாறு எடுக்கப்படும் பட்டு நூலினால் பல வர்ணங்களிலும், பல ரகங்களிலும் ஆடைகள் நெய்யப்படுகின்றன.

பட்டாடைகள் மென்மையும், நேர்த்தியும், பளபளப்பும் உடையவை. அவை அதிக விலையும் உடையவை. அசல் பட்டைப் போலவே இக்காலத்தில் போலிப் பட்டையும் தயாரிக்கிறார்கள். அவை நார் வகைகளைக் கொண்டு செய்யப்படுகின்றன. செயற்கைப் பட்டு விலை குறைவு உடையது. அசல் பட்டைப்போல் போலிப்பட்டு சிறப்புடையது அல்ல.

புழுக்களைக் கொல்லாமலே பட்டெடுக்கும் முறையும் இப்போது கையாளப்பட்டு வருகின்றது. இந்தியாவில் பண்டை நாட்களிலிருந்தே பட்டு இருப்பதாகத் தெரிகிறது. முதன் முதலில் அது சீனாவில் உண்டாயிற்று என்றும், அங்கிருந்தே பிற நாடுகளுக்குப் பரவிற்று என்றும் சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். எவ்வாறாயினும் பட்டாடைகளை யாவரும் விரும்புகிறார்கள். நமது தேசத்தில் அவை புனிதமுடையவைகளாகப் பாராட்டப்படுகின்றன.



## 17. அன்னை அடைந்த வீர இன்பம்

நெப்போலியன் என்னும் மாபெரும் வீரன் "பிள்ளைகளின் பிற்காலத் தீயவாழ்க்கைக்கோ, நல் வாழ்க்கைக்கோ காரணமாக விளங்குபவர் தாய்மார் கள்தான்" என்று அடிக்கடி கூறுவது உண்டு. பெற்ற தாய் தன் பிள்ளைகள் எத்தகைய தொழில்களுக்கு உரியவர்கள் என்று அவர்கள் செயல் மூலமாக அறிந்து சிறு வயது முதற்கொண்டே அச்செயல் களுக்குத் தகுந்த மாதிரி பயிற்சியளித்து வந்தால் பிற் காலத்தில் பிள்ளைகள் சிறந்து விளங்குவார்கள்.

நம்தமிழ் நாட்டில் வீரஅன்னையர் பலரிருந்தனர். அவர்கள் தம் பிள்ளைகளின் நடத்தைக் கேற்பப் பயிற்சி கொடுத்து வந்தார்கள் என்பதைத் தமிழ்

நூல்களில் பரக்கக் காணலாம். அப்பேர்ப்பட்ட ஒரு மாது சிரோமணியின் செயலை இங்குப் பார்ப் போம்.

தமிழ் மறவர் குடியில் வீர நங்கையொருத்தி ஆண்மையும் அஞ்சா நெஞ்சமும் புடைத்த போர் வீரனாகிய கணவனுடன் இல்லறம் நடத்தி வந்தாள். அவள் பிள்ளைப்பேறு இல்லாதிருந்தாள். அவளும் கிழவிப் பருவம் அடைந்தாள். தலை மயிர் நாணற் பூவைப்போல வெளுத்திருந்தது. உடலும் தளர்ச்சி யுற்றது. தனக்குப் பிள்ளையில்லையே யென்று பெருங் கவலை கொண்டிருந்தாள். கணவனும் அவள் படுங் கவலையில் பெரும் பங்கு கொண்டான். இருவரும் கவலையுற்று மெலிவுற்றனர்.

வெகுநாள் கழித்து அவள் வீரக்குமரன் ஒரு வனைப் பெற்றெடுத்தாள். இருவரும் இசைந்து அப் பையனுக்கு வெற்றி வேலன் என்று பெயரிட்டனர்.

இருவரும் அப்பிள்ளையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் போற்றி வளர்த்து வந்தனர். அவனும் இளம் வயது முதற்கொண்டே தன் நண்பர்களுடன் அரண்கட்டுதல், அழித்தல் முத லிய வீர விளையாட்டுகளையே விளையாடி வந்தான். இவைகளைக் கண்ட பெற்றோர் அவனுக்கு வில், வாள், வேல் முதலியவற்றில் பயிற்சியளித்து வந்தனர். பையன் இருபதாண்டு வயதுடைய கட்டழகனாயிருந் தான். பெற்றோரிருவரும் மிகுந்த கிழ நிலையில் இருந் தனர். தந்தை ஒரு நாள் இறந்தார்; தாயைக் காப் பாற்ற வெற்றிவேலனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை.

இந்தச் சமயத்தில் நாட்டில் பெரும்போர் மூண்டது. பையனுக்குத் தோளிரண்டும் துடித்தன. வீரம் செறிந்த நெஞ்சு விம்மிதமுற்றது. கைகளும் கால்களும் நல்லுரம் ஏற்பட்டு விறைப்புடனிருந்தன. கண்கள் சிவந்தன.

போர்க்கோலம் பூண்டான் வெற்றிவேலன். போருக்குச் செல்லத் தாயிடத்து விடைகேட்க வருகின்ருன் என்ற குறிப்பை முதுபருவத்தாய் அறிந்தாள். தவக்கமின்றிப் போய்வா என்று விடை கொடுத்தாள்.

வெற்றிவேலன் வீரத்துடன் போர் செய்தான். கடைசியில் எதிரியின் அம்பு அவன் மார்பில் தைத்தது. பல பகைவர்களைக் கொன்ற வெற்றிவேலன் இறுதியில் ஒரு பகைவனுல் கொல்லப்பட்டான்.

தன்மகன் இறந்த செய்தியைத் தாய் கேட்டுத் தளர்ந்த பருவத்தில் தள்ளாடித் தள்ளாடித் தடியொன்று ஊன்றிக்கொண்டு போர்க்களம் சென்று தன் மகன் யானைக்கொம்பால், மார்பில் விழுப்புண் பட்டு இறந்து கிடப்பதைக் கண்டு தன்னறியா மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடந்தாள். என்னே! இவளுடைய வீரம். இவள் அன்ருே வீர அன்னை !

| | |
|---|---|
| மாபெரும் வீரன் | மெலிவுற்றனர் |
| வீர அன்னையர் | வெற்றிவேலன் |
| மாதுசிரோமணி | கட்டழகன் |
| ஆண்மையும் | புறநானூறு |
| நாணற் பூ | தாய்மார்கள் |

**கேள்விகள்**

1. நெப்போலியன் அடிக்கடி என்ன சொல்வது வழக்கம்?

2. வீர அன்னைக்கு எப்படிப் பிள்ளைப்பேறு உண்டாயிற்று?

3. அப்பிள்ளையை எவ்வாறு வளர்த்து வந்தனர்?

4. போர் என்று கேட்டதும் வீரமகனுக்கு ஏற்பட்ட மெய்க்குறிகள் யாவை?

5. அவன் எப்படி இறந்தான்?

6. தாய் போர்க்களம் சென்று எம்மாதிரி மனோநிலை அடைந்தாள்?

7. இக்கதை எதைக் காட்டுகிறது?

## 18. பாடம் ஏறுவது எப்படி?

**மங்களம் :** கமலா, ஏன் உற்சாகமில்லாமல் இருக்கின்றாய்? பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது களிப்புடன் செல்ல வேண்டாமா?

**கமலா :** பள்ளிக்கூடத்திற்குத் தினமும் தப்பாமல் போகிறேன். ஆனால் பயன் ஒன்றுமில்லை. அதனால்தான் சோர்வு அடைகின்றேன்.

**மங்களம் :** பள்ளிக்கூடத்திற்குச் சென்றும் பயன் இல்லை என்கின்றாயே! நீ சொல்வது விந்தையாய் இருக்கின்றது. பள்ளிக்கூடத்தில் பாடங்கள் எவ்வளவு செவ்வையாகக் கற்பிக்கப்படுகின்றன!

**கமலா :** ஆசிரியர்கள் பாடங்களை விளக்கமாகவும், தெளிவாகவும் சொல்கிறார்கள். பிறர்மீது நான் குற்றம் கூறவில்லை. எனக்குத்தான் பாடம்

ஏறவில்லை. பாடம் ஏறுவது எவ்வாறு என்றும் எனக்குத் தெரியவில்லை.



**மங்களம் :** படித்தால் பாடம் ஏருதா? எனக்கெல்லாம் பாடம் ஏறவில்லையா?

**கமலா :** உனக்கு வீட்டிலும் யாராவது சொல்லிக் கொடுப்பார்கள்.

**மங்களம் :** வீட்டில் எனக்கு ஒருவரும் சொல்லிக் கொடுக்கிறதில்லை. பள்ளிக்கூடத்தில் மட்டுந்தான் பாடம் கேட்கிறேன்.

**கமலா :** எல்லோரும் சேர்ந்தாற்போல் பாடம் கேட்கிருேம். எனக்கு மட்டும் பாடம் ஏறவில்லை. நீயும் நன்ருகப் படிக்கின்ருய். மற்றப் பிள்ளைகளும் நன்ருக ஒப்பிக்கின்ருர்கள். பாடம் ஏறும் தந்திரம் எனக்குத் தெரியவில்லை. நீ அதை எனக்குத் தெரிவிப்பாயா?

**மங்களம் :** தந்திரம் ஒன்றுமில்லை. முறை யாகக் கேட்டால் பாடங்கள் மனத்தில் ஏறும்.

**கமலா :** அம்முறையைத்தான் நான் கேட் கின்றேன்.

**மங்களம் :** பாடம் கேட்கும் முறையாவன :— நல்ல தாகமுடைய ஒருவர் இனிய பானத்தை எவ் விருப்பத்துடன் பருகுவாரோ, அவ்வாறு பாடங்களை விரும்பிக் கேட்கவேண்டும். சில பிள்ளைகள் பாடம் கேட்கும்போது காலாட்டிக்கொண்டே இருப்பார்கள் ; கையில் ஏதேனும் வைத்துக்கொண்டு சிறு குறும்பு செய்துகொண்டு இருப்பார்கள். தங்கள் சிந்தையை வேறு எங்கேயாவது வைத்துக் கொண்டிருப்பார்கள் ; ஆசிரியர் பாடம் சொல்லும்போது கண் பார்வையை வேறு எங்கேயாவது செலுத்திக் கொண்டிருப்பார்கள். பாடம் ஏருமல் போவதற்கு இவைகளே காரணங்கள்.

பாடம் கேட்கும்போது கை, கால் முதலிய உறுப்புக்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது. அதனுல் தான் கைகளைக் கட்டிக்கொண்டு நேராக உட்காரும் வழக்கம் பண்டை நாளில் இருந்து வந்தது. பிள்ளை களுடைய கண் பார்வை ஆசிரியர்மீது இருக்க வேண்டும். கவனமெல்லாம் பாடத்திலேயே இருக்க வேண்டும். காதுகள் சிறு வாயில்கள் ; நெஞ்சு ஒரு களஞ்சியம்.

செவிகளாகிய வாயில்களின் வழியாகப் பாடங் களை உள்ளமாகிய களஞ்சியத்தில் புகுத்தி மறக்க விடாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

வகுப்பில் நன்ருகக் கவனித்தால் பாடம் எளிதில் ஏறும். வகுப்பில் கவனிக்காமல் இருந்துவிட்டு

வீட்டிலே எவ்வளவு படித்தாலும் பாடங்கள் விளங்க மாட்டா. வகுப்பில் கேட்டவைகளை வீட்டிற்குச் சென்று சிந்திக்க வேண்டும். அவற்றில் சந்தேகங்கள் இருந்தால், மறுநாள் வகுப்பிற்குச் சென்றதும் ஆசிரியரைக் கேட்டு விளக்கம் பெறவேண்டும். இவ்வாறு செய்தால் பாடம் ஏருமல் போகுமா ?

**கமலா :** இப்போது நான் தெளிவுற்றேன். நீ அடிக்கடி ஆசிரியரிடம் பல சந்தேகங்கள் கேட்பாய். அறியாமல் நான் உன்னைக்கூடக் கோபிப்பது உண்டு. இப்போதுதான் பாடம் ஏறும் வகை எனக்கும் விளங்குகிறது. இனி நான் நீ கூறிய படியே செய்வேன். 'பாடம் ஏறவில்லை' யென்று பாடத்தின்மேல் நான் குற்றம் சாற்றமாட்டேன். பாடத்தை மனத்தில் புகுத்தி இருத்திக் கொள்வது பிள்ளைகளுடைய கடமை.

| | | |
|---|---|---|
| விந்தை | செவ்வையாக | கற்பிக்கப்படுகின்றன |
| தந்திரம் | முறையாக | ஒப்பிக்கின்றார்கள் |
| பானம் | பருகுவார் | சிறுகுறும்பு |
| சிந்தை | காரணம் | களஞ்சியம் |
| செவி | உள்ளம் | புகுத்தி |
| இருத்திக்கொள்வது | விளக்கம் | சாற்றமாட்டேன் |

**கேள்விகள்**

1. பாடம் ஏருமல் போவதற்குக் காரணங்கள் யாவை ?
2. பாடம் கேட்கும் முறைகள் யாவை ?
3. முன்காலத்தில் பாடம் கேட்பவர்கள் எப்படி உட்காருவது வழக்கம் ? ஏன் ?

# 19. மாணுக்கர்

கல்வி கற்கும் சிறுவர்களுக்கு மாணுக்கர் என்று பெயர். மாணுக்கர்கள் தக்க ஆசிரியரை அடுத்துக் கல்வி கற்கின்ருர்கள். கல்வி கற்கும் முறையால், மாணுக்கர்களே மூன்று பிரிவினர்களாகப் பெரியோர் கள் கூறுவார். அவர்கள் (1) தலேமாணுக்கர், (2) இடை மாணுக்கர், (3) கடை மாணுக்கர் எனப் படுவர். அவர்கள் ஒவ்வொருவரின் தன்மைகளேப் பற்றியும் இங்கு அறிவோம்.

**தலேமாணுக்கர் தன்மை** :—தலேமாணுக்கர் ஆவின் இயல்புக்கு ஒப்பாவார்கள். ஆ என்ருல் பசு. பசுவானது நல்ல புற்கள் உள்ள இடத்தை நாடிச் செல்லும்; அங்கு அது வயிருர நின்று மேயும்;



பிறகு ஓரிடத்தில் படுத்துக்கொண்டு அசைபோடும்; விழுங்கிய உணவைத் திரும்பவும் வாய்க்குக் கொண்டு வரும்; அதை நன்கு மென்று, நுரையாக்கி மீண்டும் விழுங்கும்.

அதுபோலவே தலேமாணுக்கர் நல்ல பள்ளியை விரும்பிச் சேர்வார்கள். ஒரே பள்ளிக்கூடத்தில் நிலேத்துப் பல வகுப்புக்களேயும் படித்து முடிப் பார்கள். வகுப்பில் கேட்ட பாடங்களேப் பற்றி

அன்றுடம் வீட்டில் சிந்திப்பார்கள்; கற்றவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள்.

இடைமாணுக்கர் கிளியின் தன்மைக்கு ஒப்பாவர். சொன்னதைக் சொல்லும் கிளிப் பிள்ளை. சொன்னதைத் தவிர வேறு மொழி பேசுவதற்கு அதற்குத் தெரியாது.



அதுபோலவே ஆசிரியர் கூறிய அளவோடு நிற்பவர்கள் இடமாணுக்கர்கள். தம்முடைய முயற்சியால் கற்றதைப் பெருக்கிக் கொள்ளும் தன்மை அவர்கள்பால் இராது. ஒரு மாதிரிக் கணக்கை ஆசிரியர் கற்பித்தால், அதைப்போன்ற வேறு பல கணக்குகளைத் தாமாகச் செய்யும் திறமை அவர்களிடம் தோன்றுது.



கடைமாணுக்கர் இல்லிக் குடம், ஆடு, எருமை ஆகியவற்றின் தன்மைகளுக்கு ஒப்பாவார்கள். இல்லிக்குடம் என்பது ஓட்டைக் குடம். அதில் ஊற்றும் நீர் துவாரத்தின் வழியே ஒழுகி விடும். அதுபோன்று கேட்டபாடங்களைச் சிந்தையில் வைத்துக்கொள்ளாமல் விட்டுவிடுபவர்கள் கடைமாணுக்கர்கள்.

ஆடு ஓரிடத்தில் நிலைத்து நின்று மேயாது; செடிக்கொரு தழையாக மேய்ந்துகொண்டே இருக்கும்; ஆனால் வயிறு நிரம்பிற்று என்பது இராது. ஒரு பள்ளியில் அல்லது ஓர் ஆசிரியரிடத்தில் நிலைத்துப் படிக்காதவர்கள் கடைமாணக்கர்கள். நீண்டநாள் படித்தாலும் அவர்கள் அறிவு நிரம்பப் பெறார்கள்.

எருமை குளிப்பதற்காக நீர்த்துறையில் இறங்கினால், நல்ல நீரையும் கலக்கிச் சேறாக்கிவிடும். அத்தன்மையைப் போல் அடுத்த பிள்ளைகளையும் கெடுக்கும் இயல்பு உடையவர்கள் கடைமாணக்கர்கள்.



பிள்ளைகளே, நீங்கள் இம் மூவகையினருள் எவ்வகையினராக இருக்க விரும்புவீர்கள்? தலைமாணக்கர்களாகவே இருக்க விரும்புவீர்கள் அல்லவா?

நல்ல மாணக்கர்களிடம் அமையப்பெற வேண்டிய வேறு பண்புகளும் சில உள. அவைகளாவன :— (1) படித்த பாடங்களை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது; (2) பாடங்களில் ஏற்படும் ஐயங்களை ஆசிரியர்பால் தெரிவித்து, அவற்றைத் தீர்த்துக் கொள்வது; (3) நல்ல மாணக்கர்கள் ஒருவரையொருவர் பாடத்தில் கேள்வி கேட்பது, ஒருவர்க்கொருவர் விடை கூறுவது; (4) ஒரு முறை படித்தவைகளைப் பன்முறையும் திரும்பத் திரும்பப் படித்துத் தெளிவது என்பன.

நீங்கள் மேற்கூறிய பண்புகளைப் பெற்று ஒழுகி, கல்வியில் நல்ல தேர்ச்சி பெற்று அறிவுடைய மக்களாக விளங்குவீர்களாக.

| | | |
|---|---|---|
| மாணாக்கர் | தலை | தன்மை |
| ஆசிரியர் | இடை | இயல்பு |
| அடுத்து | கடை | பண்பு |
| சிந்திப்பார்கள் | மாதிரி | ஒப்பு |
| இல்லிக்குடம் | திறமை | நிலைத்து |
| சேருக்கி | அமையப்பெற | பன்முறை |

## கேள்விகள்

1. மாணாக்கர்களுள் மூவகையினர் யாவர்?

2. தலைமாணாக்கர்களின் இயல்புகள் யாவை?

3. எருமை, ஆடு, கிளி இவற்றின் தன்மைகளைத் தனித்தனியே விளக்கு.

4. நல்ல மாணாக்கரிடம் அமையப் பெறவேண்டிய பண்புகள் யாவை?

5. இல்லிக்குடத்திற்கு ஒப்பாவார் யார்? எவ்வாறு?

# 20. பஞ்சதந்திரம்

## 1. காகம் பாம்பைக் கொன்றது

பகைவனோர் பலவான் ஆயின்
பார்த்தவர்க் கஞ்சா தந்தப்
பகைவனிற் பலவா னாலே
பகையினை வெல்லல் வேண்டும்
மிகையுறு முட்டை யெல்லாம்
விழுங்கிய பாம்பைக் காகம்
நகையினைப் பொந்தி லிட்டு
நலமுறக் கொன்ற தன்றே ?

## 2. முயல் சிங்கத்தைக் கொன்றது

வலியதோர் பகையா னாலும்
மருவுநற் சூழ்ச்சி வல்லோர்
நலிய அப் பகையை வென்று
நலத்தினை அடைந்து வாழ்வார்
வலியதோர் சிங்கந் தன்னை
வனமுயல் சூழ்ச்சி யாலே
இலைமலி பாழ்ங் கிணற்றுக்
கிரையெனச் செய்த தன்றே.

# 21. கடிதங்கள்

## நண்பனுக்கு எழுதும் கடிதம்

53, கள்ளத் தெரு,
திருச்சிராப்பள்ளி,
29—10—50.

அன்பார்ந்த தோழனே,

நலம். நலமறியப்பேரவா. உன்னுடைய கடிதம் வரப்பெற்றேன். செய்திகள் யாவும் அறிந்தேன். உன் தகப்பனுர் உயர்ந்த வேலேக்கு மாற்றப் பெற்ருர் என்ற செய்தி கேட்க என் மனம் மிக மகிழ்ச்சி அடைகிறது.

உன் வீட்டார் நலத்தையும், அங்குள்ள நம் நட்பினர் நலத்தையும் தெரிவிக்குமாறு வேண்டு கிறேன். இங்கே என் தமையனுர் சென்னேயிலிருந்து வந்திருக்கின்ருர்.

நிற்க, இனி வரப்போகும் கிறிஸ்துமஸ் பண்டிகை விடுமுறையின்போது நான் மதுரைக்குச் சென்று அங்குள்ள திருமலே நாயக்கர் மஹால், மீனுட்சியம்மன் கோவில் முதலியவற்றைக் கண்டு களிக்க விரும்புகின்றேன். நீ என்னுடன் அப் பொழுது வரமுடியுமா? வரவிரும்பின், ஒரு வாரத் திற்கு முன் கடிதம் விடுக்க. பிற பின் தெரிவிப்பேன்.

இங்ஙனம்,
உன் உண்மையுள்ள நண்பன்,
பாலசுந்தரன்

முகவரி :—

**ம. தங்கவேலன்,**
12, ஐயன் கடைத் தெரு,
காத்ரெல் போஸ்டு,
தஞ்சை மாவட்டம்.

## புத்தகக் கடைக்கு எழுதுங் கடிதம்

திருச்செந்துறை,
29—10—50.

அன்புடையீர்,

தாங்கள் சங்க நூல்களைக் குறைந்த விலையில் பதிப்பித்து விற்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். அத்துடன் சிறுவர்க் குகந்த நீதிநூற் கொத்து திருந்திய முறையில் அச்சிடப் பெற்றிருப்பதாகவும் அறியலுற்றேன். ஆகையினால், இந்நிருபங் கண்டவுடன் பரிமேலழகர் உரையுடன் கூடிய திருக்குறள் ஒன்றும், வேங்கடசாமி நாட்டார் அவர்கள் உரையுடன் கூடிய நீதிநூற் கொத்து ஒன்றும் ஆக இரண்டையும் வி. பி. பி. மூலமாக அனுப்புமாறு கோருகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் நம்பிக்கையுள்ள,
**அ. இராஜு**

**முகவரி :—**

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
6, பழவக்காரத் தெரு,
சென்னை.

# 22. பத்திரிகையும் செய்தியும்

பிள்ளைகளே, நீங்கள் பலவிதப் பத்திரிகைகளைப் பற்றி அறிவீர்கள். பிள்ளைகள் படிக்கக்கூடிய பத்திரிகைகள் பல; பெரியவர்கள் படிக்கக் கூடிய பத்திரிகைகள் பல. தினசரி வெளிவருவன, வாரந் தோறும் வெளிவருவன, மாதந்தோறும் வெளிவருவன என்று அவை பல வகைப்படும்.

பத்திரிகைகளைப் படிப்பது ஒரு நல்ல பழக்கம். பல நாடுகளிலும் ஆங்காங்கு நிகழும் நிகழ்ச்சிகள் அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் வெளியாகின்றன. இருந்த இடத்தில் இருந்தவாறே ஒவ்வொருவரும் உலகச் செய்திகளை அறியலாம். ஓரிடத்தில் வெள்ளப் பெருக்கு, பஞ்சம், நோய், பூகம்பம் முதலியவைகளால் துன்பம் ஏற்பட்டால் அச் செய்தி உடனே எல்லா நாடுகளிலும் பரவி விடுகிறது. பிற நாட்டார்கள் உடனே துன்பப்பட்டவர்களுக்கு உதவுகிறார்கள்.

செய்திகள் மட்டுமேயன்றி, அறிவைப் பெருக்கும் கட்டுரைகளைப் பலர் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள். ஆராய்ச்சிப் புதுமைகளும் பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

அறிஞர்களிடம் நேரில் கேட்பது போல் பல அரிய பொருள்களைப் பத்திரிகைகளால் அறிகிறோம். பாமரராய் இருப்பவர்களும், தினமும் பத்திரிகைகளைப் படித்து வந்தால் நல்ல அறிஞர்கள் ஆவார்கள். நல்ல பத்திரிகைகளை நீங்கள் நாடோறும் படிப்பீர்களாக.

## பத்திரிகைச் செய்தி

தினத்தூது (1—11—49) விரோதி வருஷம் ஐப்பசி
மாதம் 16-ந் தேதி செவ்வாய்க்கிழமை

திருச்சி, அக். 31. இன்று காலை திருச்சி செயிண்ட் ஜோசப் காலேஜில் வருஷாந்தர விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. கல்வி மந்திரி மாதவமேனன் விழாவுக்குத் தலைமை வகித்தார். திருமதி குட்டியம்மாளு அம்மாள் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினர். போட்டிகளில் வெற்றி பெற்றது போல வாழ்க்கையிலும் வெற்றிபெற முயல வேண்டுமென்று மாதவமேனேன் மாணவர்களுக்குப் புத்திமதி கூறினர்.

## 23. இரட்டைப்புலவர்

சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன் சோழவள நாட்டில் ஆமிலந்துறை என்னும் ஊரில் செங்குந்தர் மரபிலே இப்புலவர்கள் தோன்றினர். இவர்களுக்கு இளமையில் ஏற்பட்ட பெயர்கள் முதுசூரியர், இளஞ்சூரியர் என்பன.

இவர்களுள் ஒருவருக்குக் கண்கள் தெரியா; மற்றொருவருக்குக் கால்கள் கிடையா. முடவரைக் குருடர் எங்குச் சென்ருலும் சுமந்து செல்வது வழக்கம். இருவரும் இணைபிரியா நட்பினராயினர். இவர்கள் அத்தை மகனும் மாமன் மகனுமாவர்.

கல்வி கற்கும் காலத்தில்கூட, முடவர் உரக்க வாசிக்கும் பொழுது குருடர் அவ்வெழுத்துக்கள், பொருள், கருத்து முதலானவற்றை உளத்தில் பதிய

வைத்துக் கொள்வது பழக்கமாயிருந்தது. இவ்வாறே இருவரும் புலமை பெற்றுக் கவிபாடும் திறமையும் பெற்றனர். இவர்களின் இளங்காலப் பெயராகிய முதுசூரியர், இளஞ்சூரியர் என்னும் பெயர் காலப் போக்கில் மாறுபட்டு இரட்டைப்புலவர்கள் என்னும் பெயர் வழங்கலாயிற்று.



இவர்கள் கவிபாடுதலின் மிகத் திறமை வாய்ந்த வர்களாய் விளங்கினர். முற்பாதிப்பாட்டை முடவப் புலவர் பாடினால், அப்பாட்டின் பொருளை நன்கு ஆராய்ந்து அறிந்து பிற்பாதிப் பாட்டை குருட்டுப் புலவர் பாடி முடிப்பார். இது இவர்களுக்குள் ஏற் பட்ட நேரிய முறையாகும்.

ஒருகால், இவர்கள் தில்லை சென்று ஆங்குள்ள சிவபெருமானை வழிபடச் சென்றனர்கள். அப்பொழுது அங்கே ஒரு செல்வன் இறுமாப்புடன் உட்கார்ந்திருந்தான். இருபெரும் புலவர்களும் கோயிலை வலம் வந்த பின்னர்ச் செல்வனிடம் ஏதேனும் பொருள் பெறலாமென்ற நோக்கத்துடன் அச்செல்வனைக் குறித்துப் புகழ்ப்பா ஒன்று பாடினர். பாட்டின் நயமறியா அம்முழுமகன் "இவ்விடம் விட்டு ஓடுங்கள்" என்றான். புலவரிருவரும் வெட்கித் தலை குனிந்து "இக்கீழ் மகனிடமா! அரும் பாவைப் பாடினேம்!" என்று தங்களையே நொந்து கொண்டு அவ்விடம் விட்டு அகன்றனர்.

அவ்விடத்தினின்று நீங்குங்காலத்தில் ஒரு புலவர்,

"மூடர் முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா—ஆடகப்பூம்

என்று அரைப்பாட்டைப் பாடினர். மற்றொருவர்,

செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகன் ஆனால்"

என்று மறுபாதியையும் பாடினர். இப்பாடலைக் கேட்ட செல்வன் வெட்கிச் சென்றான். இவ்வாறு இவர்கள் பல ஊர்களுக்குச் சென்று தம் நாவன்மையைக் காட்டிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தி வந்தனர். பல சந்தர்ப்பங்களில் பல தனிப்பாடல்கள் பாடியுள்ளனர். இவர்கள் பாடல்கள் யாவும் சிறந்த பொருட்செறிவும் இலக்கிய நயமும் மிளிரப் பெற்றவை.

| | |
|---|---|
| சற்றேறக்குறைய | காலப்போக்கில் |
| செங்குந்தர் மரபு | முற்பாதி |
| முதுசூரியர் | நேரியமுறை |
| இளஞ்சூரியர் | முழு மகன் |
| இணைபிரியா | நோக்கத்துடன் |
| மிளிரப்பெற்றவை | பொருட் செறிவு |
| நாவன்மை | இலக்கிய நயம் |

**கேள்விகள்**

1. இரட்டையரின் இளமைப் பெயர்கள் யாவை ?
2. இவர்கள் உறவையும், பிறந்த ஊரையும், மரபையும் சொல்லுக.
3. இவர்கள் எவ்வாறு கல்வி கற்றனர் ?
4. செல்வன் வெட்கித் தலைகுனியக் காரணம் என்ன?

## 24. மின்னலும் இடியும்

"மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்பது நம் தமிழ் நாட்டுப் பழமொழி. மழைக் காலங்களில் மேகங்கள் இருண்டிருக்கும். மின்னலும் இடியும் அதிகமாகத் தோன்றும். சில வேளைகளில் இடியும் மின்னலும் தோன்றும் பொழுது பயந்து வீட்டிற்குள் சென்று விடுகிறோம்.

முற்காலத்தில் இடியையும் மின்னலையும் பற்றிப் பலவாறாகக் கதை சொல்லி வந்தனர். அக்கதைகள் யாவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் பெரும்பாலும் நம்பப்படுவதில்லை. சில முதியவர்கள் இன்னும், மின்னற் கொடி என்னும் பெண்ணை இடி என்னும் அசு

ரன் துரத்திச் செல்கிறான் என்றும் மேகங்கள் இந்திரன், வருணன் முதலிய தேவர்களின் வாகனங்களென்றும் எண்ணியிருக்கின்றனர். மேகத்தை வாகனமாகக்கொண்ட இந்திரனுக்கு மகனான அருச்சுனன் பெயரைச் சொன்னால் இடி நிலத்தில் விழாதென இப்பொழுதும் நம்புகின்றவர் உளர்.

மின்னல், இடி முதலியவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர் பெஞ்சமின் பிராங்களின் என்னும் அமெரிக்க விஞ்ஞானி. மின்சாரப் பொறி மின்னலை ஒத்திருப்பதை அவர் கண்டார். மின்னல் என்பது ஒரு பெரிய மின்சாரப் பொறியாக இருக்கலாம் என்று கருதினார்.

மின்சாரப் பொறி நேராய்ப் பாய்வதில்லை; நெளிந்து செல்லும் இயல்புடையது. மின்னல் அத்தகைய குணத்தையே பெற்றிருக்கிறது. கூர்மையான நுனியையுடைய பொருள்கள் மின்சக்தியைத் தம்மிடம் ஈர்க்கின்றன. அது போல மின்னலும் மலை, கோபுரம், புகைப் போக்கி முதலியவற்றின் உச்சியைத் தகர்க்கின்றன. மின்சாரம் போதுமான சக்தி உடையதாயிருந்தால் உயிர்களைக் கொல்லுகின்றது. மின்னலும் உயிர்களைக் கொல்லும் தன்மையைப் பெற்றிருக்கிறது. மின்சாரப் பொறியில் சடசட வென்னும் ஓசை உண்டாகிறது. அதுபோலவே மின்னலிலும் அத்தன்மையான ஓசை உண்டாகிறது.

மின்னலும் இடியோசையும் ஒரே இடத்தில் உண்டானாலும், ஒலியின் அலைகளைவிட ஒளி அலைகள் விரைந்து செல்லும் இயல்புடையன. ஆகலின் மின்னொலி பின்னும் மின்னொளி முன்னும் நம்மைச் சேர்கின்றன.

பெஞ்சமின் மேகங்களில் மின் ஆற்றல் நிறைந்திருக்க வேண்டுமெனக் கருதினர். அதற்காக அவர் ஒரு சோதனை நடத்தினர். அச்சோதனையால், அவரது கருத்து வலிமை பெற்றது. ஆகவே மின்னல் என்பது மேகங்களில் நிரம்பி அடர்ந்து இருக்கும் மின்சார சக்தியேயாகும்.

இடி யென்பது மின்னலின் ஒளி நிலத்தை நோக்கிப் பாய்வதே ஆகும். இந்த மின்சுடர் எப்பொருளின்மீது பாய்ந்தாலும் அப்பொருள் நாசமடையும். இவ்வொளி கட்டடம் முதலியவற்றை இடித்துத் தள்ளுவதால் இடியெனக் காரணப் பெயரிட்டனர் நம் முன்னோர். இப்படி விழுகின்ற இடி தனித்து நிற்கும் பொருள்களையே நாடிச் செல்லும். ஆகையினுல்தான், தனித்த கோபுரம், மரம் முதலியவற்றை நாடிச் சென்று அழிக்கின்றது. அடர்ந்த காடுகளையும் நெருங்கிய வீடுகளையும் இடி தாக்காது.

சிலர் கட்டடங்களில் இடி விழாமல் தடுப்பதற்காகச் செம்பினுலாகிய கம்பி அல்லது பட்டையைக் கட்டடத்தின்மேல் நீட்டிக் கொண்டிருக்கும்படி வைப்பார்கள். அதன் மற்றொரு முனை சுவரின் வெளிப்புறமாகப் பூமியின் கீழே புதைக்கப்பட்டிருக்கும். இக்கம்பியின் மேல்பாக முனை மின் ஆற்றலைக் குறைக்கும். மின்னல் பாய்ந்தாலும் கம்பியின் வழியாகப் பூமிக்குள் சென்றுவிடும். கட்டடத்தைச் சேதப்படுத்தாது. இதற்கு இடிதாங்கி என்று பெயர்.

இயற்கையாகவே மின் சக்தி எங்கும் பரவியிருக்கின்றது. உதாரணமாக அரக்குக் கோலைக் கம்பளித் துணியில் நன்கு தேய்த்தபின் கிழிந்த காகிதத்துண்டு

களுக்கருகில் கொண்டுவந்தால், அவை குதித்து அரக்குக் கோலில் ஒட்டிக் கொள்ளும். கண்ணுடிக் கோலைப் பட்டு ஆடையில் தேய்த்தால் மின் சக்தி ஏற்படுகின்றது. நம்முடைய தலை மயிரைப் பிளாஸ்டிக் சீப்பினுல் நன்ருக வாரிய பிறகு சிறிய குண்டூசியில் வைத்தால், குண்டூசி ஒட்டுகிறது. ஆகலின் மின்சாரம் பொருள்களில் இயற்கையாகவே இருக்கின்றது என நாம் அறியலாம்.

| | |
|---|---|
| நூற்ருண்டு | கட்டடம் |
| முதியவர் | சேதப்படுத்தாது |
| ஈர்க்கின்றன | உதாரணமாக |
| மின்சாரம் | காரணப்பெயர் |
| மின்ஆற்றல் | இயற்கையாக |
| அரக்குக்கோல் | மின்சக்தி |

## கேள்விகள்

1. முற்காலத்தில் இடியையும் மின்னலையும் பற்றி வழங்கிய கதைகள் யாவை?

2. மின்னலையும் இடியையும் பற்றி ஆராய்ச்சி செய்தவர் யார்? அவர் மின்னலைப்பற்றி என்ன கருதினுர்?

3. மின்சாரத்திற்கும் மின்னலுக்குமுள்ள ஒற்றுமையைக் கூறுக.

4. மின்னொளி, மின்னெலியை விடச் சீக்கிரம் நம்மைச் சேர்கிறது—ஏன்?

5. மின்னல் என்பது என்ன?

6. இடியென்பது என்ன? ஏன் இப்பெயர் ஏற்பட்டது? இது எதை நாடிச் செல்லும்?

7. இடிவிழுவதை எவ்வாறு தடுக்கலாம்?

# 25. விவேக சிந்தாமணி

புத்திமான் பலவானுவான்
பலமுளான் புத்தியற்ருல்
எத்தனை விதத்திலுைம்
இடரது வந்தே தீரும்
மற்ருெரு சிங்கந் தன்னை
வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றின் சாயல்
காட்டிய உவமை போன்றே. (1)

பொருளில்லார்க் கின்ப மில்லை
புண்யமும் இல்லை என்றும்
மருவிய கீர்த்தி இல்லை
மைந்தரிற் பெருமை யில்லை
கருந்திய கரும மில்லை
கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ் சாரப்
பிரேதமாய்த் திரிவர் அன்றே. (2)

ஒப்புடன் முக மலர்ந்தே
உபசரித் துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட்டாலும்
உண்பதே அமிர்தமாகும்
முப்பழ மொடுபால் அன்னம்
முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியினேடு
கடும்பசி யாகுந் தானே. (3)



## 26. அறிவின் ஆராய்ச்சி

நாம் இப்போது வெகு நாகரிகமான காலத்தில் வாழ்கின்றோம். மாட மாளிகைகள் சிறந்து விளங்கும் நகரங்களைத் தேசமெங்கும் காண்கின்றோம். சிற்ப வேலைகள் அமைந்த கோவில் கோபுரங்களும், மசூதிகளும், மாதா கோயில்களும் பார்ப்பவர் கண்களைக் கவர்கின்றன. பெரிய நகரங்களில் மின்சார விளக்குகளின் ஒளியால் இரவும் பகல்போல் காண்கின்றது.

போக்கு வரவிற்கு ஏற்ற சாலைகளும், பாலங்களும் நாடெங்கும் அமைந்திருக்கின்றன. வெற்றுச் சாலைகளின் வழியாக நாம் எங்குச் செல்ல வேண்டுமென்றாலும் மோட்டார் வண்டிகள் நம்முடைய பிரயாணத்தை எளிதாக்குகின்றன. ஆயிரம் மைல் செல்ல வேண்டுமென்றாலும், குறைந்த செலவிலும், விரைவிலும் செல்வதற்கு இருப்புப் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. கடலைக் கடப்பதற்கும் கப்பல்கள் அமைக்கப்பட்டுள. இவையே யன்றி, பறவைபோல் பறக்கும் விமானங்கள் நம்மை ஆகாய வீதியில் ஏற்றிச் செல்லுகின்றன.

உலகத்தில் பல்வேறு நாடுகளிலும் நடக்கும் நிகழ்ச்சிகளை இருந்தவிடத்தில் இருந்தவாறே அப்போதைக்கப்போது ரேடியோ மூலம் அறிகின்றோம். குமரியில் இருக்கும் ஒருவர் இமயத்தில் இருக்கும் மற்றொருவருக்கு முக்காலணாத் தபால் கார்டின் வாயிலாகச் செய்திகளை அறிவிக்க முடிகின்றது. பலநூறு மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்கும் தந்தியின் மூலமாகச் சில நிமிஷங்களில் செய்திகளை அனுப்ப முடிகிறது. இம்மட்டோ! ஒரு நகரத்திலுள்ளவர் வேறு நகரத்தில் வாழும் மற்றொருவரோடு நேருக்கு நேர் பேசுவதுபோல் டெலிபோன் மூலம் பேச இயலுகின்றது.

கலைகளை வளர்க்கும் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் ஆயிரக் கணக்கில் அச்சாகி நாள்தோறும் வெளி வருகின்றன. மாவு அரைப்பது முதல் எல்லாத் தொழில்களுக்கும் இயந்திரங்கள் ஏற்பட்டுவிட்டன. அவ்வியந்திரங்களின் உதவியால், பல்பேர்கள் சேர்ந்து பல நாட்களில் முடிக்கக் கூடிய வேலையைச் சிலபேர்கள் சிலமணி நேரத்தில் செய்து முடிக்கிறார்கள். பல்லாயிரம் பகைவர்களை ஒரு நொடியில் அழிக்கக்கூடிய போர்க் கருவிகள் விதம் விதமாகப் பெருகிவிட்டன.

எல்லோரும் எளிதில் காணமுடியாத அரிய காட்சிகளைச் சினிமாக்களில் காண முடிகிறது. குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தவர் வரை ஒவ்வொருவரும் அணியத் தக்க ஆடை அணிகள் நவீனமாக நாளுக்கு நாள் மாறுபடுகின்றன.

இவ்வாறாக நாகரிகம் பெருகி வளர்ந்த வரலாற்றைப் பற்றி நீங்கள் அறிவது அவசியம்.

ஆதி காலத்தில் மனிதர்களுக்கு வீடுகள் கட்டிக் கொண்டு வாழத் தெரியாது. ஆடை அணிகளைச் செய்யத் தெரியாது. உணவுகளைச் சமைத்துண்ண அவர்கள் அறிந்திலர். தொழில்கள் செய்யவும் அவர் களுக்குத் தெரியாது. நாடு நகரங்களும் அப்போது ஏற்படவில்லை; எங்கும் காடுகளாகவே இருந்தன. மக்களும் மாக்களைப் போலவே திரிந்து வாழ்ந்தார் கள்; காய்கனி முதலியவற்றைப் பச்சையாக உண் டார்கள்; இறைச்சிகளையும் பச்சையாகவே தின்றார்



கள். பிறகு நாளடைவில் மரப்பட்டைகளையும், இலை தழைகளையும் உடுத்துக் கொண்டார்கள்; இறைச்சி களைச் சுட்டுத் தின்றார்கள்; மரக்கிளைகளின்மேல் பரண்களையும், தரையின்மேல் குடிசைகளையும் அமைத்துக்கொண்டு வாழ்ந்தார்கள்.

காலப்போக்கில் மண்ணைப் பிசைந்து சுவர்கள் எழுப்பவும், ஓலைகளைக் கொண்டு கீற்றுகள் முடைய வும், கீற்றுகளைக்கொண்டு கூரைகளை வேயவும், மண் ணினால் பாண்டங்கள் செய்யவும், வில், அம்பு, கற் கருவிகள் செய்யவும், உணவுகளைச் சமைத்து உண்

ணவும், ஆடைகள் நெய்யவும் கற்றுக் கொண்டார்கள். அலைந்து வாழ்ந்த மனிதர்கள் ஆங்காங்கு ஊர்களை அமைத்துக் கொண்டு ஓரிடத்தில் நிலைத்து வசிக்க ஆரம்பித்தார்கள்.

மண்ணிலிருந்து செங்கற்கள் தோன்றின. பின், செங்கற்சுவர்களும், மாடி வீடுகளும் தோன்றலாயின. கருங்கற் கட்டடங்களும், கோயில்களும் ஏற்பட்டன. கடைசியாகச் சிமெண்டு என்னும் கலவைப் பொருளால் கட்டடங்கள் ஏற்படலாயின. உலோகங்களும், அவற்றின் உபயோகங்களும் தெரியவந்தன. அவற்றால் கருவிகளும், பாத்திரங்களும் செய்யப்பட்டன.

இயற்கைப் பொருள்களின் குணங்கள் கண்டு பிடிக்கப்பட்டன ; செய்பொருள்கள் பெருகின. எழுத்துக்கள் தோன்றலாயின. ஏட்டுச்சுவடிகளில் நூல்கள் எழுதப்பட்டன. காகிதம் பிறந்தது. அச்சுத் தொழில் உண்டாயிற்று. இலக்கண இலக்கியம் மருத்துவம், சிற்பம், ஓவியம், இசை முதலிய கலைகள் யாவும் வளர்ந்தன ; விஞ்ஞானம் முதிர்ந்தது. இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. எஞ்சின் வண்டிகளும், கப்பலும், வானவூர்தியும் ஒன்றன்பின் ஒன்றாக மலிந்தன. வர்த்தகம் வளர்ந்தது; உலக உறவு உண்டாயிற்று; வாழ்க்கை உயர்ந்தது; செல்வம் பெருகிற்று ; தபாலும் தந்தியும், திரைப்படக் காட்சிகளும், வானொலியும், போர் முறைகளும் இப்போது உள்ள நிலையில் உயர்ந்தன.

அரசியல் முறைகள் திருத்தம் பெற்று, மக்களுள் ஒற்றுமையும், சமத்துவமும் அமைந்து வருகின்றன. இவையெல்லாம் மனிதர் தம் அறிவால் பெருக்கிக்

கொண்டவையாகும். அறிவு ஆராய்ச்சியால் இன்னும் என்னென்ன அதிசயங்கள் நிகழக் கூடுமோ!

அறிவைப் பெற்ற மனிதர்கள் அதை நல்வழியில் பயன்படுத்த வேண்டும். அறிவைக் கொண்டு நல்லவை செய்யவேண்டும். தேசங்களுக்குள் ஒற்று மையையும், அமைதியையும் உண்டாக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| கவர்கின்றன | பிரயாணம் | எளிதாக்கு |
| செல்வதற்கு | இருப்புப்பாதை | கடப்பதற்கு |
| ஆகாயவீதி | நிகழ்ச்சி | ரேடியோ |
| வாயிலாக | டெலிபோன் | கலைகள் |
| பத்திரிகை | அச்சு | இயந்திரம் |
| நொடியில் | போர்க்கருவி | முதிர்ந்தவர் |
| ஆடைஅணி | நவீனம் | வரலாறு |
| நாகரிகம் | ஆதிகாலம் | மாக்கள் |
| நாளடைவில் | பரண்கள் | காலப்போக்கு |
| இயற்கை | செய்பொருள் | ஏட்டுச்சுவடி |
| இலக்கணம் | இலக்கியம் | மருத்துவம் |
| சிற்பம் | ஓவியம் | விஞ்ஞானம் |
| வானவூர்தி | மலிந்தன | வானொலி |
| போர்முறை | ஆராய்ச்சி | அதிசயம் |

**கேள்விகள்**

1. முதன் முதலில் மனிதர்கள் எவற்றைப் போல வாழ்ந்தார்கள்? எவ்வாறு?
2. வீடுகள் படிப்படியாக தோன்றிய வகை எவ்வாறு?
3. பிரயாணத்தில் இப்போது ஏற்பட்டுள்ள வசதிகள் யாவை?
4. முக்காலணுக் கார்டு செய்யும் வேலை யாது?
5. அறிவை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?



## 27. சாரணர்கள்

மக்கள் ஒருவர்க்கொருவர் உதவி புரியும் மனப் பான்மையுடன் வாழ வேண்டும். இச்சிறந்த எண்ணம் மக்களுக்கு இளமையிலேயே தொடங்க வேண்டும். சாரணர் இயக்கம் இச்சிறந்த பண்பை இளைஞர்களுக்கு உண்டாக்கவல்லது.

இக்கருத்துப் பற்றியே பள்ளி மாணவர்களுக்குச் சாரணப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வியக் கத்தை **ஸர் ராபர்ட் பேடன் பவல்** என்னும் ஆங்கில இராணுவ வீரர் முதன் முதலில் ஏற்படுத் தினர். நம்நாட்டில் பண்டித **ஸ்ரீ ராம் பாஜ்பே, ஸ்ரீ மதன்மோகன் மாளவியா, அன்னி பெஸண்டு அம்மையார்** முதலியோர் இவ்வியக்கத்தைப் பரப் பினர்.

ஒரு மாணவன் சாரணனைச் சேருவதற்குச் சில விதிகள் உண்டு. சாரணன் ஆவதற்கு விரும்பும்

சிறுவன் முன்னரே உள்ள சாரணர் படையின் முன்பாக வாக்குறுதி செய்துகொள்ள வேண்டும். அவ்வாக்குறுதியாவது, "நான் கடவுளிடத்தும் நாட்டினிடத்தும் பக்தியுடையவனுக இருப்பேன். என்னுல் இயன்ற வரையில் பிறருக்கு உதவுவேன். மற்றச் சாரணர்களேச் சகோதரர்களாக எண்ணு வேன். சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, மொழி வேறுபாடு, நிறவேறுபாடு இவைகளேப் பாராட்ட மாட்டேன்" என்பன.

ஒரு சாரணச் சிறுவன் தான் சொல்லிய வண்ணம் செயல் முறையில் காட்ட வேண்டும். ஒரு முறை ஒரு குற்றம் செய்தால், அக்குற்றத்தை எண்ணிப் பார்த்து மறுமுறை செய்யாதிருக்க வேண்டும். மக்களேப் போலவே மாக்களிடத்துப் பெரிதும் அன்பும் இரக்கமும் காட்டவேண்டும். பொய், திருட்டு, பொருமை முதலிய தீக்குணங்கள் சாரணனிடம் இருக்கக்கூடாது.

பதினெரு வயது முதல் பதினெட்டு வயதிற்குட் பட்ட இளேஞர்கள் சாரணராகப் பயிற்சி பெறுதற் குரியவர். சாரணராய்ச் சேர்வதற்கு முன்பே பெற்ருேரின் அநுமதி பெறவேண்டும். பின்பு சாரணரின் அடையாளங்கள், வந்தனமளிக்கும் முறைகள், பலவித முடிச்சுக்கள் இடுதல், கொடியைப் பறக்கச் செய்யும் முறை, தண்ணீரில் நீந்துதல், ஒரு விஷயத்தைச் சாரணனுக்குக் கொடி அசைப்பு மூலமாய் அறிவித்தல் முதலியவற்றையும், தச்சு வேலே, தீயணேக்கும் யந்திரத்தை உபயோகிக்கும் முறை, முதலுதவி செய்யும் முறை முதலியவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும். சாரணன் காலேயில் தன்

கழுத்தில் கட்டிக்கொள்ளும் துணியில் முடிச்சுப் போடும் பொழுதே "இன்று ஏதேனும் நன்மை செய்ய வேண்டும்" என்று எண்ணுவான். பின்னர் முடிச்சை அவிழ்க்கும் பொழுது, "இன்று யாருக்கு என்ன நன்மை செய்தேன்?" என்று நினைந்து பார்ப்பான். இம்மாதிரியாக சாரணர்கள் பழக்கப் படுகிறார்கள்.

எங்கேனும் விபத்து ஏற்பட்டதாகத் தெரிந்தால், சாரணன் விரைந்து அவ்விடத்திற்குச் செல்ல வேண்டும். தீயினால் விபத்து ஏற்பட்டால், விபத்து ஏற்பட்ட இடத்திலுள்ள பொருள்களை வெளியில் கொண்டு வருதற்கு உதவி செய்ய வேண்டும். திரு விழாக்களிலும், மற்றச் சமயங்களிலும் காணாமற் போன பிள்ளைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். தண்ணீரில் தவறியவர்களைக் காப்பாற்றி உதவி செய்ய வேண்டும். வேறு பல முதல் உதவிகளையும் செய்ய வேண்டும். திருவிழாக் காலங்களில் பொது மக்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும்.

சாரணர் படைகள் உல்ப்கப், ஸ்கௌட், ரோவர் என மூவகைப்படுவர். இவ்வியக்கத்திற்கு ஜில்லா சாரணத் தலைவர், இராசதானிச் சாரணத்தலைவர், என்பவர்கள் உண்டு.

சாரணப் படையினர் பிரயாணம் செல்ல நேர்ந் தால், அங்கு அவர்களே சமைப்பர். எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து உண்பர். அங்கே பலவிதச் சாரண விளையாட்டுக்களும், உடற் பயிற்சிகளும் நடத்தப்படும்.

பிள்ளைகள் சாரணர் படையில் சேர்வது மிகவும் நல்லது. சாரணனாகப் பயிற்சி பெறும் மாணவன்

பிற்காலத்தில் அனைவர்க்கும் உபகாரியாகவும், நாட்டிற்குத் தொண்டனாகவும் விளங்குவான்.

| | | |
|---|---|---|
| **மனப்பான்மை** | **தொடங்கவேண்டும்** | **இயக்கம்** |
| **அநுமதி** | **வாக்குறுதி** | **விதிகள்** |
| **வந்தனம்** | **செயல் முறை** | **விபத்து** |

**கேள்விகள்**

**1. சாரணன் செய்ய வேண்டிய வாக்குறுதி யாது ?**
**2. சாரணன் செய்யக் கூடிய உதவிகள் யாவை ?**
**3. சாரணன் என்னென்ன கற்றுக் கொள்ள வேண்டும் ?**
**4. இளமையில் சாரணனாகப் பயிற்சி பெற்றவன் பிற்காலத்தில் எவ்வாறு விளங்குவான் ?**

## 28. காவிரி ஆறு

நாட்டிற்கு நீர்வளத்தை அளிப்பவை ஆறுகள். ஆற்றோரங்களில் உள்ள ஊர்கள் ஜன நெருக்கமும், நாகரிகமும் பெற்று விளங்கும். ஆற்றுப் பாசனம் உள்ள இடங்களில் நன்செய் வயல்கள் சூழ்ந்திருக்கும். ஆறு பாயும் ஊர்கள் பார்வைக்கு அழகாக விளங்கும். "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று ஔவையாரும் கூறினர்.

தமிழ் நாடு ஆற்றுப் பாசனம் நிரம்ப உடையது, காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை என்பன தமிழ் நாட்டில் பாயும் பேராறுகள். இவற்றுள் காவிரி மிகவும் சிறப்புடையது. "கா" என்றால் சோலை. காவிரியின் இரு கரைகளிலும் சோலைகள்

பரந்து விளங்குகின்றன. அதனுல் தான் காவிரி என்ற பெயர் வழங்கலாயிற்று.

காவிரிக்குப் 'பொன்னி' என்று மற்றெரு பெயரும் வழங்கும். சோழ நாடு காவிரியின் பெருக் கால் நீர் வளம் பெறுகின்றது. நீர் வளத்திஞல்தான் நல்ல விளைச்சல் விளையும். விளைச்சல் அதிகமாஞல் நாட்டில் செல்வம் பெருகும் அல்லவா ?

காவிரி யாறு குடகுமலையில் உற்பத்தி ஆகின் றது. குடகுமலை என்பது தமிழ் நாட்டின் மேற்குக் கோடியில் இருக்கிறது. அங்கே காவிரி தோன்றும் இடத்திற்குத் தலைக் காவேரி என்று பெயர்.

குடகு மலையில் பெய்யும் மழைநீர் பல சிறு அருவிகளாக ஓடும். அவ்வருவிகள் பல ஒன்று கூடி ஆருக ஆகின்றன. காவிரியாறு முதலில் மைசூர் இராஜ்யத்தின் வழியாகப் பாய்கிறது. பிறகு சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களுக்கு நடு எல்லையாக ஓடித் திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் வழியாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் பாய்கிறது. கடைசியில் காவிரிப் பட்டி னம் என்ற இடத்தில் கடலொடு கலக்கின்றது.

**கிளைநதி** :—திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே பத்து மைல் தூரத்தில் ஒரு பெரிய கிளைநதி காவிரியி லிருந்து பிரிகிறது. அதற்குக் கொள்ளிடம் என்று பெயர். கொள்ளிடம் சிதம்பரத்திற்குப் பக்கத்தில் **கிள்ளை** என்னும் இடத்தில் கடலொடு கலக்கின்றது.

**உபநதிகள்** :—காவிரி ஆற்றுடன் வேறு பல ஆறுகளும் இடையிடையே கலக்கின்றன. அவை

களுக்கு உபநதிகள் என்று பெயர். அமராவதி, பவானி, நொய்யல் என்பன காவிரியின் உபநதிகள்.

**அணைகள்** :—காவிரியின் குறுக்கே பல அணை களும் உண்டு. ஆற்றின் வெள்ளம் வீணுகாமல் அதன் குறுக்கே உயர்ந்த சுவர் எழுப்பி நீரைத் தேக்குவார்கள். அவ்வாறு எழுப்பப்படும் சுவர் **அணை** எனப்படும். அணையின் உதவியால் தேக்கப் படும் நீர் கடல்போல் திரண்டு நிலையாக நிற்கும். அவ்வெள்ளத்தை அளவாகவும், வேண்டும் போதும் பாசனத்திற்கு விடுவார்கள். இம்முறையால் வெள்ளக் காலத்தில் அதிகப் பெருக்கெடுத்துச் சேதம் ஏற்படா மல் ஊர்கள் காக்கப்படுகின்றன. ஆண்டு முழுவதும் நீர் தட்டில்லாமலும் கிடைக்கின்றது.

காவிரியின் அணைகளுள் மிக முக்கியமானவை கண்ணம்பாடி அணையும், மேட்டூர் அணையும் ஆகும். கண்ணம்பாடி அணை மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந் தது. அவ்வணையின் உதவியால் ஏராளமான நிலங் கள் பாசனம் பெறுகின்றன. மேட்டூர் அணை சேலம் ஜில்லாவில் இருக்கின்றது. மேட்டூர் அணை மிகப் பெரியது. இவ்வணையின் உதவியால் திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் தரிசாகக் கிடந்த இடங்கள் பல பாசனம் பெற்று விளை நிலங்கள் ஆயின.

கல்லணை என்பது மற்றொன்று. இது திருச்சி ராப்பள்ளிக்குப் பத்து மைல் கிழக்கே இருக்கின்றது. இங்குக் காவிரியிலிருந்து கிளையாறுகள் பிரிக்கப் படுகின்றன. அவை தஞ்சாவூர் ஜில்லாவில் பாசனத் திற்கு உதவுகின்றன.

**கீழணை** :—தஞ்சாவூர் ஜில்லாவில் ஆடுதுறை என்ற இடத்திற்கு அருகில் இவ்வணை கட்டப்பட்டிருக்கிறது. வெகு காலத்திற்கு முன் இவ்வணை சோழ அரசரால் கட்டப்பட்டது.

**மேலணை** :—காவிரியிலிருந்து, கொள்ளிடம் பிரியும் இடத்தில், கொள்ளிடத்தின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டிருக்கிறது. வெள்ளம் குறைவாக வரும் போது, இவ்வணை மூடப்பட்டிருக்கும். காவிரியில் மட்டும் வெள்ளம் ஓடும். வெள்ளம் அதிகமாக வந்தால் காவிரி தாங்காது. அப்போது இவ்வணையைத் திறந்து அதிக வெள்ளத்தைக் கொள்ளிடத்தில் விடுவார்கள்.

காலப்போக்கில் ஆறு ஓடும் இடங்கள் மணல் மிக்கு மேடாகி விடும். ஆகையால் அரசாங்கத்தார் ஆற்றின் கரைகளை உயர்த்தி ஊர்களைப் பாதுகாக்க வேண்டும். சோழ அரசர்களில் ஒருவனான கரிகால் சோழன் என்பவன் காவிரியின் கரைகளை உயர்த்தினான். இக்காலத்தில் ஆறுகளின் கரைகளை மராமத்து இலாகாவினர் பாதுகாத்து வருகிறார்கள். நம் அரசாங்கத்தார் காவிரியின் பாசனத்தை மேன்மேலும் விருத்தி செய்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| நீர்வளம் | பாய்கிறது | சேதம் |
| ஆற்றுப்பாசனம் | உபநதி | தரிசு |
| பெருக்கு | கிளைநதி | பாசனம் |
| அருவி | அணை | காலப்போக்கு |

**கேள்விகள்**

1. காவிரி எங்கே தோன்றுகிறது? எங்கே முடிகிறது?
2. காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகள் யாவை?
3. மேலணை எங்கே கட்டப்பட்டிருக்கிறது? அதன் உபயோகம் என்ன?

## 29. நேர்மையுள்ள அதிகாரி

தமிழகத்தில் சோழநாட்டைச் சேர்ந்த பழம்பதிகளுள் பாச்சிலூர் என்பது ஒன்று. அவ்வூரில் செல்வநாதன் என்றொரு வர்த்தகன் இருந்தான். அவன் இளமை முதற்கொண்டே வர்த்தகத் தொழிலில் பழக்கமுள்ளவன். சரக்குகளைக் கொள்முதல் செய்யும் வகையிலும், தக்க இலாபம் வைத்து அவைகளை விற்கும் முறையிலும் அவன் நல்ல சாமர்த்தியம் உடையவன். உற்பத்திப் பொருள்களைப் பருவகாலத்தில் கொள்முதல் செய்வான். அவையவை உற்பத்தியாகும் இடம் அறிந்து மொத்தமாக வருவிப்பான். ஆகையால் அவனுக்கு அடக்கவிலை குறைவாகும். விலை ஏறிய காலங்களில் அவைகளை நல்ல இலாபத்துடன் விற்பான். ஆகையால் அவன் சில வருஷங்களில் செல்வத்தில் பெருக்கம் உற்றான். நாணயமாக வியாபாரம் செய்து நல்ல பெயர் எடுத்து வாழ்ந்தான்.

செல்வம் பெருகப் பெருக அவனுக்கு ஆசையும் பெருகிற்று. ''ஆசைக்கோர் அளவில்லை'' அல்லவா? ஊரார் தன்மீது நம்பிக்கை யுடையவர்கள் என்பதை

யும் அவன் அறிவான். வியாபாரத்தில் தான் முறை தப்பி நடந்தாலும், மற்றவர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று எண்ணினன். அதுமுதல் அவன் கள்ள அளவுகளை உபயோகப்படுத்த ஆரம்பித்தான். முப்பத் தொன்பது பலம் எடையுள்ள படிக்கல்லை வைத்துக் கொண்டு, ஒரு வீசை என்று நிறுத்துப் போடுவான். அவன் விற்கும் படியளவால் ஒருபடி தானியம் அளந்து போட்டால் அது அரை



வீசம் படி குறையும். இவ்வாருக ஒரு வருடம் அவன் மோச வியாபாரம் செய்தான். செல்வ நாதனுடைய கள்ளத்தனத்தை மற்ற வர்த்தகர்கள் கண்டு கொண்டார்கள். அச்செய்தியைச் சர்க்காருக்கும் எட்டும் படி செய்து விட்டார்கள். அவ்வரலாறு செல்வ நாதனுக்குத் தெரியாது.

திடீரென்று ஒருநாள் சர்க்கார் அதிகாரி ஒருவர் கடைக்காரர்களின் தராசு, படிக்கல், படி வகைகளைச் சோதனை செய்ய வந்தார். மற்றெல்லாக் கடைக் காரர்களும் தாங்கள் வைத்திருந்த படி, தராசு, உழக்குகள், படிக்கல்கள் முதலியவைகளைச் சந்தேக மில்லாமல் சோதித்து வைத்துக் கொண்டார்கள்.

செல்வநாதன் மட்டும் அதிகாரி வருவதைக் கேட்டு அஞ்சவில்லை. அதிகாரியாக வருபவர் தன் உறவினராகிய இளைஞர் என்று அவன் தெரிந்து கொண்டான். தன்னுடைய அளவைகளை அவர் சோதிக்கவே மாட்டார் என்றும், சோதித்தாலும் கள்ளத்தனத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டார் என்றும் எண்ணினான். கள்ள அளவைகளை வெளிப்படையாகவே வைத்துக் கொண்டு நாணய முள்ளவன்போல் மதிப்பாக உட்கார்ந்திருந்தான்.

அதிகாரி ஒவ்வொரு கடையாக வரிசையாகச் சோதித்துக் கொண்டே செல்வநாதன் கடைக்கும் சென்றார். அவனுடைய அளவைகளை முறைப்படி சோதித்தார்.

தராசும் சரியாகக் காணப்படவில்லை; படிக்கல் களும் எடை குறைந்தன; உழக்குகளும் அளவு குறைந்தன. அவைகளை யெல்லாம் அதிகாரி எடுத்து வைத்துக்கொண்டார்; செல்வநாதனைக் குற்றவாளி யாகப் பதிவு செய்து கொண்டார். "செல்வ நாதரே, கள்ளத்தனம் செய்பவர் யாவரேயாயினும் தண்ட னைக்கு உரியவர்; என் கடமையை நான் முறைப்படி முடிக்கிறேன்; குற்றவிசாரணை மன்றத்திற்கு வருவீ ராக. நீர் கள்ள அளவுகளை வைத்துக்கொண்டு

பிறரை மோசம் செய்தது ஒரு பெருங் குற்றம். உறவு முறை பாராட்டி இறுமாந்திருந்தது ஓர் அறியாமை. உறவு என்பது வீட்டில் விருந்து உண்பதற்கு மட்டும் கொள்ளத்தகும். கடமையைச் செய்வதில் முறை தப்புவது கூடாது. நான் இப்போது உமது குற்றத்தைப் பதிவு செய்யாவிட்டால், சர்க்காருக்கு ஒரு துரோகியாவேன். சர்க்கார் துரோகம் என்பது நாட்டிற்குத் துரோகம். ஆகையால் உம்மைக் குற்றவாளியாகப் பதிவு செய்துவிட்டேன். குற்ற விசாரணை அதிகாரி உமக்குத் தக்கவாறு அபராதம் அல்லது தண்டனை விதிப்பார். கள்ளத் தனத்தை விட்டுவிடுக. நாணயமாக வர்த்தகம் செய்க'' என்று கூறினார்.

இவரன்றோ நேர்மையுள்ள அதிகாரி! அதிகாரிகள் சட்டப்படி தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். சர்க்கார் பணியில் உறவு, நட்பு, உதவி முதலியவை பாராட்டவும், கொள்ளவும் கூடாது. எவர்க்கும் முறைப்படி நியாயம் வழங்க வேண்டும்; முறைப்படி செய்யக்கூடிய உதவிகளைச் செய்யவேண்டும்.

| | | |
|---|---|---|
| எடை | குற்றவாளி | நேர்மை |
| அளவை | அதிகாரி | தண்டனை |
| பதிவு | இறுமாந்து | அபராதம் |
| கள்ளத்தனம் | துரோகி | மன்றம் |
| நாணயம் | சோதித்தல் | மதிப்பாக |
| சட்டம் | பழம்பதி | காட்டிக் கொடுக்க |
| அடக்கவிலை | பருவகாலம் | வெளிப்படையாக |

## பயிற்சி

(1) அதிகாரம் உடையவர் அதிகாரி :—இம்மாதிரி பின் வருபவைகளை முடித்துக் கூறு.

குற்றம் செய்பவர் ———.
——— துரோகி.
——— மோசக்காரர்.

(2) வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

சட்டம், பணி, சர்க்கார், நாணயம், ஆசை.

## கேள்விகள்

1. செல்வநாதன் செய்த குற்றம் என்ன ?

2. அதிகாரி வருவதை அறிந்தும் அவன் ஏன் மதிக்க வில்லை ?

3. அதிகாரி செல்வநாதரைப் பார்த்து என்ன கூறினர் ?

4. அதிகாரிகள் எவ்வாறு நடக்க வேண்டும் ?



## 30. சர்க்கரை

சர்க்கரை ஓர் இனிப்புப் பொருள். இனிப்புச் சுவை நிரம்பப்பெற்ற மூலப் பொருள்களிலிருந்து சர்க்கரை செய்யப்படுகிறது. மங்கலச் சடங்குகளில் சர்க்கரையை முதலில் வழங்குகிறார்கள். மகிழ்ச்சி தரும் செய்தியை ஒருவர் கூறக்கேட்டால் "வாய்க்குச் சர்க்கரை போடு" என்கிறார்கள். இக்காலத்தில் சர்க்கரை நம்முடைய தினசரித் தேவைகளுள் ஒன்றாக ஆகிவிட்டது.

சர்க்கரையில் பழுப்புச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை என இரண்டு வகைகள் உண்டு. பழுப்புச் சர்க்கரை பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் செய்யப்படுகிறது. வெள்ளைச் சர்க்கரை சிற்சில இடங்களில் மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

நமது நாட்டில் பெரும்பாலும் கரும்பிலிருந்தே சர்க்கரை செய்யப்படுகிறது. விளைந்த கருப்பங்கழிகளைச் சிறு துண்டுகளாக நறுக்குவார்கள். அத்துண்டுகளை ஆலையிலுள்ள இரண்டு உருளைகளுக்கு இடையே கொடுப்பார்கள். ஆலை ஓடும்போது அவ்வுருளைகள் சுழன்றுகொண்டே இருக்கும். அப்போது அவை கரும்புத் துண்டுகளை நன்ருகப் பிழிந்துவிடும்; அதிலுள்ள சாறெல்லாம் கீழே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் விழும். பிழியப்பட்ட சக்கை வேருக அப்பால் விழுந்துவிடும். பிறகு அச்சாற்றைப் பதமாகக் காய்ச்சி ஆறவைத்தால் பழுப்புச் சர்க்கரையாகும். காய்ச்சிய சாற்றை அச்சுக்களில் ஊற்றி, ஆறவைத்து எடுத்தால் வெல்லக்கட்டியாகும்.

கரும்பு பயிராகும் ஊர்களில் எல்லாம் கரும்பாலைகள் இருக்கும். செக்கைச் சுற்றுவதுபோல் மாடுகளைப் பூட்டி ஓட்டி ஆலையை நடத்துவதே நம் நாட்டில் தொன்றுதொட்ட வழக்கம். இப்போது மின்சார சக்தியை இணைத்தும் ஆலையை ஓட்டுகிருர்கள்.

பழுப்புச் சர்க்கரையிலுள்ள அழுக்கைப் போக்கிஞல் வெள்ளைச் சர்க்கரையாகும். பழுப்புச் சர்க்கரையை நீரில் கரைத்து அதில் எலும்பு சுட்ட கரித்தூளைச் சிறிது போடுவார்கள். அக்கரித்தூள் அடியில் தேங்கி நிற்கும். சர்க்கரை நீரிலுள்ள அழுக்கெல்லாம் பிரிந்து அடியில் நிற்கும் எலும்புக் கரியுடன் திரண்டு நிற்கும். சர்க்கரை நீர் தெளிவாகவும், சுத்தமாகவும் இருக்கும். அதை மறுபடியும் காய்ச்சி ஆறவைத்தால் வெள்ளைச் சர்க்கரை ஆகும். இவ்

வாறே காய்ச்சி அச்சுகளில் ஊற்றினுல் கற்கண்டு ஆகும்.

கிராமங்களில் ஆங்காங்குள்ள கரும்பாலைகளில் தயராகும் சர்க்கரையும் வெல்லமும் நாட்டின் தேவைகளுக்குப் போதுவது இல்லை. பெரிய சர்க்கரை ஆலைகளில் இயந்திரங்களைக் கொண்டு ஏராளமாகத் தயாரிக்கப்படும் சர்க்கரையே நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. ஜாவா முதலிய வெளிநாடுகளின் சர்க்கரை நமது நாட்டில் மிகுதியாக இறக்குமதியாகி வந்தது. இப்போது சுதேசி சர்க்கரையைக் கொண்டே தேவைகளை நிறைவுறச் செய்ய முயல்கின்றோம். கரும்பு சாகுபடியும், கரும்பாலைகளும் நமது நாட்டில் வரவரப் பெருகி வருகின்றன. தமிழ்நாட்டில் தென்னுற்காடு ஜில்லாவைச் சேர்ந்த நெல்லிக்குப்பத்திலும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த புகலூரிலும் பெரிய கரும்பாலைகள் நடைபெறுகின்றன. இந்தியாவில் வேறுபல இடங்களிலும் சர்க்கரை ஆலைகள் நடைபெறுகின்றன.

சர்க்கரையை ஒரு கலப்புணவாகக் கொள்ளலாம். அது அளவாகக் கொள்ளப்பட்டால் உடலுக்கு நலத்தைக் கொடுக்கும்; அதிகமாக உட்கொண்டால் நோய்க்கு விதையாகும். சர்க்கரையில் செய்யப்பட்ட தின்பண்டங்கள் பல நாட்கள் கெடாமல் இருக்கும். சர்க்கரை பல மருந்துகளிலும் கலக்கப்படும்.

பனஞ்சாற்றிலிருந்தும் வெல்லமும் கற்கண்டும் செய்யப்படுகின்றன. அவை பனைவெல்லம், பனங்கற்கண்டு என்ற பெயரால் வழங்கப்படும். அவை உடல்

வெப்பத்தைத் தணிக்கும் குணமுடையவை. தென் ஜில்லாக்களில் ஈச்சஞ்சாற்றிலிருந்தும் கற்கண்டும் வெல்லமும் செய்யப்படும். அவையும் உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியவை. கருப்பஞ் சாற்றிலிருந்து செய்யப்படும் வெல்லமும் சர்க்கரையும் உஷ்ணத்தை உண்டாக்கும்.

| | | |
|---|---|---|
| மங்கலச் சடங்கு | ஆலை | கலப்புணவு |
| தொன்றுதொட்ட | அச்சு | இணைத்து |
| நோய்க்கு விதை | திரண்டு | தணிக்கும் |
| மின்சார சக்தி | சுதேசி | விளைந்த |
| மூலப்பொருள் | வழங்குகிறார்கள் | வெப்பம் |

## பயிற்சி

கிராமத்தில் நடைபெறும் கரும்பு சாகுபடி அல்லது சர்க்கரை ஆலையைப் பற்றி உரையாடல் நடத்துக.

## கேள்விகள்

1. வெல்லம் எவ்வாறு செய்யப்படுகிறது?
2. வெள்ளைச் சர்க்கரையை எப்படித் தயாரிக்கிறார்கள்?
3. நமது நாட்டில் பெரிய சர்க்கரை ஆலைகள் எங்கெங்கே நடைபெறுகின்றன?
4. எந்தெந்தப் பொருள்களிலிருந்து கற்கண்டும் வெல்லமும் செய்யப்படுகின்றன?

# 31. வாழ்வினும் மானமே பெரிது

## காட்சி 1

[ சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் திருப்போர்ப்புரம் என்னுமிடத்தில் சண்டை நடக்கிறது. அச்சண்டையில் சேரன் தோல்வியுறுகிறான். சோழன் அவனைக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிலிடுகின்றான். ]

**இரும்பொறை :** (தூக்கத்திலிருந்து விழித்து) ஆ! இதென்ன ஆச்சரியம்! இவ்விடத்தில் இருக்கின்றேன். இது பகைவன் ஊரல்லவா! இப்புண்கள் பகைவனால் ஏற்பட்டவை. கடல் போன்ற சேனையும் மலைபோன்ற யானையும் பெற்றிருந்தாலும் பகைவன் ஊரகம் சென்று சண்டை செய்தல் கூடாது.

ஏனெனில் பலமற்றவரும் வலிமை மிகுந்தவர் போல் தாம் பிறந்த ஊரில் சண்டை செய்வர் என்ற உண்மையை இப்பொழுதுதான் உணர்ந்தேன். கடந்ததைக் குறித்துக் கலங்குவதால் பயனில்லை. என் உடல் சிறைப்பட்டது. என் உயிர் சிறைப்படவில்லை. இவனால் வேறு என்ன செய்ய முடியும்? (கோபச்சிரிப்புச் சிரிக்கிறான்.) தாகம் அதிகமாயிருக்கின்றது; நாக்கு உள்ளிழுக்கப்படுகிறது. (வாயில் காவலர்களைக் கூப்பிடுகின்றான்.)

**காவலர்கள் :** எங்களையா கூப்பிடுகிறீர்? என்ன வேண்டும்?

**இரும்பொறை :** குடிக்கச் சிறிது தண்ணீர் தாருங்கள்.

**கிழவன் :** மிகவும் தாகமா ?

**இளையான் :** ஐயா நாங்கள் காவல் புரிவோமே யொழிய ஏவல் புரிய மாட்டோம்.

**இரும்பொறை :** (நாணங்கொண்டு) என்ன அறிவிலிகள் ! நல்ல அறிவுரை சொல்வோம். நீங்கள் இப்பொழுது தண்ணீர் தராவிட்டால், உடனே இறப்பேன். பழி உங்களைத்தான் சாரும். (சாய்ந்து விழுகின்றான்.)

**இளையான் :** இது மெய்யோ பொய்யோ தெரிய வில்லை.

**கிழவன் :** மும்முடி வேந்தரில் ஒருவன் பொய் சொல்ல இசையான். ஆதலின் நாமிருவரும் சேர்ந்து தண்ணீர் கொடுப்போம்.

**இளையான் :** நாம் அரசனிடம் தெரிவிக்காது எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது.

**கிழவன் :** அப்படியானால் நான் அரசனிடம் தெரிவிக்கின்றேன்.

## காட்சி 2

**களம்** :—அரசனது சபை

**காலம்** :—நடுப்பகல்

**கூற்று** :—சோழன், மந்திரி, சேனைத்தலைவன், வைத்தியர், காவலன்.

**சோழன்** : இங்கு வியர்க்க வியர்க்க வந்தவன் யாரோ ?

**சேனைத்தலைவன்** : குடவாயிற் கோட்டத்துச் சிறை காக்கும் காவற்காரன்.

**சோழன்** : ஏன் சிறை காப்பதை விட்டு வந்தாய் ?

**காவலன்** : (நடுக்கங்கொண்டு) வேந்தர் பெருமானே, சிறைப்பட்டசேரன் தண்ணீர் வேட்கையால் தடுமாறி இறக்கும் நிலையில் இருக்கின்றான்.

**சோழன்** : தக்க காலத்தில் சொன்னாய். நல்ல அறிவுடையன் நீ.

**மந்திரி** : இதற்கு ஆவன செய்ய வேண்டும், அரசே. சேரர் பெருமானை வான் பொய்ப்பினும் தான் பொய்யாச் சோழ நாட்டில் பருகத் தண்ணீரின்றி இறக்கவேண்டும்? இது பெரும் பழியை அன்றோ உண்டாக்கும்?

**சோழன்** : அமைச்ச ! உடனே தண்ணீர் கொண்டு போதல் வேண்டும். என்போன்ற பேரரசன் இவ்வாறு தவித்தல் கூடாது. வைத்தியரைக் கூப்பிடு.

**வைத்தியர் :** (வருகின்ருர்) தண்ணீரில் ஏதேனும் நோயணுக்கள் உண்டா? (ஆராய்கின்ருர்.) அரசே! இத்தண்ணீர் மிகத் தூய்மையுடையது. மழை விழும்பொழுதே மேல் மாடத்திலிருந்து பிடிக்கப்பெற்றது.

**சோழன் :** வைத்தியரே! நீர் சேரன் பால் சென்று தண்ணீர் கொடுத்து, விழுப்புண்களை ஆற்றுக.

**மந்திரி :** பேரரசே! நான் சென்று அவன் கருத்து இன்னதென அறிந்துவருகின்றேன்.

**சோழன் :** அமைச்ச! நீர் சென்று சேரனுக்கு அமைதியான வார்த்தைகளைக் கூறி அமைதிப் படுத்துக.

**சேனைத்தலைவன் :** கொற்றவனே! பகைவரை எளிதாக எண்ணக் கூடாது. ஆகையினல் நானும் குறிப்புணர்ந்து வருகின்றேன்.

**சோழன் :** அவ்வாறே செல்க.

(எல்லோரும் செல்கின்றனர்)

## காட்சி 3

**களம் :**—சிறைக் கோட்டம்

**கூற்று :**—காவலர்கள், மந்திரி, மருத்துவன், சேரன்.

**காவலர்கள் :** (ஒருவர்க்கொருவர் பேசிக்கொள் கின்றனர்.)

முன்பாவது சிறிது பேச்சுக் கேட்டது. இப் பொழுது அதுகூட இல்லையே.

(மருத்துவர் வருகிருர் நாடி பார்க்கிருர். நல்ல தண்ணீர் கொடுக்கிருர்.)

**மந்திரி :** சேரர் பெரும! நான் இந்நாட்டு முதல் மந்திரி. சோழன் மிக மனம் கவல்கின்ருன். முன்னரே தண்ணீர் கொடுக்காப் பிழையைப் பொறுத்து இத்தண்ணீரை அருந்தி எங்களுடன் தேரேறி அரண்மனை வருக.

**சேரன் :** (வெகுளிச் சிரிப்புடன்) இத்தண்ணீர் என்னுயிரைக் காக்க வந்ததுபோலும். நான் தேரேறி உடன் வரவேண்டுமோ! மானம்போன பின் வாழ்வதில் சாவதே சாலச் சிறந்தது.

(உணர்ச்சி தூண்ட) சேனையெல்லாம் செத்த பின்னும், சிறையில் புகுந்த பின்னும் நாக்கு வறட்சி யடையத் தண்ணீர் கேட்ட பின்னும், அந்நீர் வரத் தாமதித்த பின்னும், அவ்வாறு வந்த நீரைக் கண்ட பின்னும், அதனை ஏற்ற பின்னும் போகாத என் சிற்றுயிர் குடிக்கும் முன்பேனும் போகட்டும். (இரத்தக் கொதிப்பால் மார்படைத்து மாள்கின்ருன்.)

---

# 32. இலக்கணக் குறிப்பு

## 1. உயிரினம்

**தேசம் - நாடு - இந்தியா - மக்கள்** - இச்சொற்களில் உள்ள எழுத்துக்களைத் தனித்தனியே கூறு—ஒவ்வொரு எழுத்தும் எந்த வகையைச் சேர்ந்தது?

**பாரத நாடு**—இச் சொற்களிலுள்ள எழுத்துக்களின் ஓசையைக் கவனி—**பா, நா**—இவ்வெழுத்துக்கள் நீண்ட ஓசை உடையவை. **ர, த, டு,**—இவை குறுகிய ஓசை உடையவை.

குறுகிய ஓசை உடையவை குற்றெழுத்துக்கள்.

அவையாவன :—**அ, இ, உ, எ, ஒ.**

நீண்ட ஓசை உடையவை நெட்டெழுத்துக்கள்.

அவையாவன :—**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.**

## 2. மெய்யின் மூவினம்

**க், ச், ட், த், ப், ற்**—இவை ஆறும் வலிய ஓசை உடையவை. இவை வல்லினம் எனப்படும்.

**ங், ஞ், ண், ந், ம், ன்**—இவை ஆறும் மெல்லிய ஓசை உடையவை. இவை மெல்லினம் எனப்படும்.

**ய், ர், ல், வ், ழ், ள்**—இவை ஆறும் நடுத்தரமான ஓசை உடையவை. இவை இடையினம் எனப்படும்.

## 3. சுட்டெழுத்து

**அ, இ, உ**—இவ்வெழுத்துக்கள் ஒரு சொல்லின் முதலில் நின்று சுட்டுப் பொருளைத் தந்தால் சுட்டெழுத்து எனப்படும். **அவன், இவன், அம் மனிதன், இவ்வீடு.**

**உ** என்னும் சுட்டெழுத்து சாதாரணப் பேச்சில் வராது. அது நடுவில் உள்ள பொருளையும், மேலே உள்ள பொருளையும் சுட்டிக் காட்டும்.—**உவன், உம்பர்.**

## 4. வினவெழுத்து

**ஆ, எ, ஏ, ஓ, யா** இவ்வெழுத்துக்கள் ஒரு சொல்லின் முதலிலாவது, கடைசியிலாவது நின்று வினப்பொருளைத் தந்தால் வினவெழுத்து எனப்படும்.

அவனா, நானா, நீயோ,

எது, ஏன், யார்.

### பயிற்சி

**சுட்டுப் பொருள் உள்ள பெயர்களைக் குறிப்பிடுக :—**

**அணில், இவன், அவர்கள், அது, இறகு**

**வினப் பொருள் உள்ள பெயர்களைக் குறிப்பிடுக :—**

**யாவர், யாது, எவன், ஏணி, எலி, நானே**

## சொற்கள்

**1. பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்துக் கூறு.**

பருத்தி செடியில் உண்டாகின்றது.
ஏழைகள் பருத்தி ஆடைகளை உடுத்துகின்றனர்.
பஞ்சிலிருந்து நூல் நூற்கப்படுகிறது.

**2. ஏற்ற வினைச் சொல்லைச் சேர்த்துப் படி :**

மகன் போரில்———
நான் பத்திரிகை———
அம்மா எங்கே———

**3. ஏற்ற பெயர்ச் சொல்லைச் சேர்த்துப் படி.**

———நமது தேசம்.
———தொழில்களைச் செய்ய வேண்டும்.
———உன் பெயர் என்ன ?

### பெயர்ச் சொற்களின் வகை

(முன் வகுப்புப் பாடம்)

இந்தியா, தேசம், அவன், தெய்வம், மக்கள், பாதம், ஆடை, வெப்பம், குளிர்ச்சி, வர்ணம், நாள், மாதம், படித்தல், பேச்சு, ஓட்டம் :—இப் பெயர்ச் சொற்கள் எந்த வகையைச் சேர்ந்தவை ?

### திணை, பால் முதலியன :—

**1. திணை, பால், எண் கூறுக:**—சிதம்பரனார், பறங்கியர், விலங்குகள், மரம், பையன்கள், சுந்தரி.

**2. இடம் :**—நான், யான், யாம், நாம், நாங்கள் :—இவைகள் தன்மை இடம். நீ, நீர், நீங்கள் :—முன்னிலை இடம். மற்றவை படர்க்கை இடம்.

நான் உன்னை வணங்குகிறேன். நீ அவனைப் பார்த்தாயா ? காளமேகம் வந்தார்—இவற்றிலுள்ள பெயர்ச் சொற்களுக்கு இடம் கூறு.

## வேற்றுமை

பெயர்ச் சொற்களுக்கு எட்டு வேற்றுமை உண்டு.

(1) பொருளின் இயல்பான பெயர் முதல் வேற்றுமை. ஈ, மரம், தேன், புலவர், சாலை, நீ, நான்.

(2) கூப்பிடுவது **எட்டாம்** வேற்றுமை. தம்பீ, அண்ணா, கந்தா முதலியன.

மற்றவேற்றுமைகளை உருபுகளால் அறியலாம் :—

**இரண்டாம்** வேற்றுமை உருபு **ஐ. மூன்றுவது** வேற்றுமை உருபுகள் **ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன். நான்காம்** வேற்றுமை உருபு **கு. ஐந்தாம்** வேற்றுமை உருபுகள் **இல், இருந்து, இன்** முதலியன. **ஆரும்** வேற்றுமை உருபுகள் **அது, உடைய. ஏழாம்** வேற்றுமை உருபுகள் **இல், இடத்தில், கண்** முதலியன.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| முதல் வேற்றுமை | — | மரம் |
| இரண்டாம் வேற்றுமை | — | மரத்தை |
| மூன்றும் வேற்றுமை | — | மரத்தால் |
| நான்காம் வேற்றுமை | — | மரத்திற்கு |
| ஐந்தாம் வேற்றுமை | — | மரத்திலிருந்து |
| ஆரும் வேற்றுமை | — | மரத்தினுடைய |
| ஏழாம் வேற்றுமை | — | மரத்தில் |
| எட்டாம் வேற்றுமை | — | மரமே. |

**எட்டு வேற்றுமையும் கூறுக :— ஊர், வீடு,** பையன், குரங்கு.

என்னுடைய, உன்னிடத்தில், அவளுக்கு, கந்தா, ஊரிலிருந்து, பூனே, சாவியை, பிரம்பால், ஆடு, தகப்பனுர்! — இச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன வேற்றுமை ?

## காலம்

1. வினைச் சொற்களுக்கு மூன்று காலங்கள் உண்டு. அவை (1) இறந்தகாலம் (2) நிகழ்காலம் (3) எதிர்காலம்.

**இறந்த காலமாவது** தொழில் முன்னமே நடந்ததைத் தெரிவிக்கும். (உ - ம்) **வந்தான்.**

**நிகழ்காலமாவது** தொழில் இப்போது நடக்கிற தைத் தெரிவிக்கும். (உ - ம்.) **வருகிறான்.**

**எதிர்காலமாவது** தொழில் இனிமேல் நடக்கப் போவதைத் தெரிவிக்கும். (உ - ம்) **வருவான்.**

2. உரைக்கிறார்கள், கேட்டார்கள், கூறுவார், அடித்தான், பேசுவேன், உண்கிறேன்—இவைகளுக்கு மற்ற இரண்டு காலங்கள் கூறு.

3. நான் நடந்தேன், நான் நடக்கிறேன், நான் நடப்பேன்.

இம்மாதிரி பின் வருபவைகளை முடி.

மரம் வளர்ந்தது ——— ———
குதிரை ஓடிற்று ——— ———
குழந்தை அழுதது ——— ———

**வாக்கியம்** (முன்னறிவுப் பயிற்சி)

செல்வம், அதிகாரி, தண்டனை, சோதித்தார், செய்தான், வருக.—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

**வாக்கியத்தின் உறுப்புகள்**

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்— என்பன வாக்கியத்தின் உறுப்புக்கள்.

**வியாபாரி வியாபாரம் செய்கிறான்.—**

இவ்வாக்கியத்தில் **வியாபாரி** எழுவாய். **செய் கிறான்** பயனிலை. **வியாபாரம்** செயப்படுபொருள்.

வாக்கியத்தின் கருத்தை முடித்து நிற்கும் வினை முற்றே பயனிலை. பயனிலையைக் கொண்டு **யார்** அல்லது **எது** என்று கேள்வி கேட்டால் எழுவாயை

அறியலாம். **யாரை** அல்லது **எதை** என்று கேட்டால் செயப்படுபொருளை அறியலாம். **சில வாக்கியங்களில்** சில வினைகள் செயப்படு பொருளை உடையவை. சில வினைகள் செயப்படு பொருள் இல்லாதவை.

**பின்வரும் வாக்கியங்களில் எழுவாய் முதலியன எடுத்துக் கூறு :—**

அதிகாரி குற்றவாளியைத் தண்டித்தார்.
நீ உன் கள்ளத்தனத்தை விடவேண்டும்.
குதிரை வேகமாக ஓடுகிறது.
நான் மதுரைக்குப் போகிறேன்.

**குறிப்பு :**—இது தனிப்பாடம் அன்று. இதில் கொடுக்கப்பட்ட மாதிரியில் இடையிடையே பயிற்சிகள் கொடுக்கவேண்டும்.

# 33. மூதுரை

(ஔவையார் அருளிச் செய்தது)

நன்றி யொருவருக்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். (1)

நல்லா ரொருவருக்குச் செய்த வுபகாரம்
கல்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர். (2)

அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (3)

அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. (4)

உற்ற விடத்தி லுயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். (5)

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம். (6)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. (7)

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. (8)

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. (9)

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகாதளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். (10)

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். (11)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவ்வையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (12)

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (13)

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம். (14)

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு. (15)

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். (16)

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம். (17)

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (18)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறைப்புடையன்—மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. (19)

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையுங் காப்பார் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். (20)

# 34. நல்வழி

(ஔவையார் அருளிச் செய்தது)

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. (1)

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா–இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். (2)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. (3)

ஒருநா ளுணவை ஒழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைக்கூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. (4)

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (5)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா
துயிர்விடுகை சால வுறும். (6)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். (7)

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல். (8)

ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (9)

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. (10)